₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 | Issue 12 | December 2024

*“அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்” பிலி. 2:6,7.*

## இறைவன் மனிதனானார்



## இவ்வன்புக்கு நான் எம்மாத்திரம்!

நான் எம்மாத்திரம்

2 சாமுவேல் 7:18



# ஆரம்ப வரிகள்...

## இறைவன் மனிதனானார்!

இந்த ஆண்டு முழுவதும் 'நான் எம்மாத்திரம்' என்ற தலைப்பை மையமாக வைத்து தியானித்து வருகிறோம். அதன் அடிப்படையில் இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் **'இறைவன் மனிதனானார்! அவ்வன்பிற்கு நான் எம்மாத்திரம்?'** என்பதை சற்று விரிவாக தியானிப்போம். மற்றவர்களின் நிலையிலிருந்து அவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுதலை ஆங்கிலத்தில் Empathy என்று கூறுவர். அதைதான் ஒரு தேவனுடைய மனிதன் Jesus Walked in My shoes என்று கூறுகிறார். ஒரு மனிதனுடைய தேவைகளை, பாடுகளை, கஷ்டங்களை பார்த்து மட்டுமல்ல, பாடுபட்டு அனுபவிக்க வேண்டும் என்றால், அவனைப்போல் மாறி அவனுக்குள்ளே, அவனுடைய நிலைமைக்குள் செல்ல வேண்டும். அதற்காகவே இறைவன் நமக்காக மனிதனாக பிறந்து, நம்மைப்போல் பாடு அனுபவித்தார். வார்த்தையாய் இருந்த தேவன் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார் (யோ. 1:14). இவ்வன்பிற்கு மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம்! தேவன் நம்மை மீட்டெடுக்க மூன்று வித ரூபங்கள் எடுத்ததை பவுல் பிலி. 2:6-11 வசனங்களில் விளக்குகிறார். 1. தேவ ரூபம் 2. அடிமை ரூபம் 3. மனித ரூபம் (மனித சாயல்).

**1. தேவ ரூபம்:** கிறிஸ்து தேவனுடைய ரூபமாக இருந்தார் (வச.6). கிறிஸ்து தேவனுக்கு சமமாய் இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. அதை அவர் கொள்ளையாடவேண்டிய அவசியமும் இல்லை. காரணம் அது அவருக்கே சொந்தமானது. அதாவது, 100% தெய்வ சுபாவமும், குணநலன்களும் கிறிஸ்துவில் நிறைந்து காணப்பட்டன.

**2. அடிமை ரூபம்:** கிறிஸ்து தேவனுக்கு சமமானவராக இருந்தும், அவரின் எல்லா மேன்மையையும் துறந்து, தம்மைத்தாமே வெறுமையாக்கினார். தேவ ரூபமாயிருந்தவர் ஏழைக்கோலமாகவும், அடிமையின் ரூபமெடுக்கும் அளவிற்கு தம்மைத் தாழ்த்தினார் (2கொரி. 8:9).

**3. மனித ரூபம்:** கிறிஸ்து 100% தேவனாயும் 100% மனிதனாயும் வாழ்ந்தார். நம்மைப்போல் எல்லா விதத்திலும் வளர்ந்தார் (லூக். 2:52). மனித ரூபமான இயேசு மாமிசத்தையும், இரத்தத்தையும் உடையவராய் பூமிக்கு வந்தாலும், நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராய் வாழ்ந்தார் (எபி.2:14 & 4:15). நம்மை மீட்கும் பொருட்டு நமது நிலைமைக்குள்ளாக வந்தார்.

ஏன் அவர் மனித ரூபம் எடுக்கவேண்டுமென்றால் 1. சாவை வென்று நமக்கு இரட்சிப்பு உண்டுபண்ண (எபி. 2:14). 2. மனிதர்களாகிய நமது உணர்வுகள், வலிகள், பாடுகள் போன்றவற்றை நம்மைப்போல் அனுபவித்து நமக்காக பரிந்து பேசவும், உதவவும் (எபி. 2:18). 3. தெய்வத்தன்மைகளான அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்றவற்றை நமக்கு வெளிப்படுத்தவுமே (யோ. 14:9). இவ்வாறு கிறிஸ்து நமக்காய் மனிதனாக பிறந்ததை கிறிஸ்மஸ் ஆக கொண்டாடுகிற நாம் இந்த நற்செய்தியை அறியாதோரும் அறிந்திடச் செய்ய புறப்பட்டுச் சென்றிருக்கும் நம் ஊழியர்களை நம் ஜெபங்களில் தாங்குவதோடு நாமும், நாம் வசிக்கும் இடங்களில் இந்த அன்பின் தெய்வத்தை அநேகர் அறிந்திட, அனுபவிக்க நம் சொல்லாலும், செயலாலும் அறிவித்திடுவோம். உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

“அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை யாகவே இருந்தது” யோ. 1:14.

மனிதர்களை தேவனின் புத்திரர்களாக்க இறைமகன் மனிதனானார். – சி.எஸ். லூயிஸ்

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” யோ. 3:16.

சாத்தான், “நீ பரிசுத்தவான் அல்ல” என்று கூறுகிறான். ஆம்! நான் அவ்வாறு இல்லை, நான் ஒரு பாவி; எனவே இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க இவ்வுலகத்திற்கு வந்தார். – சார்லஸ் ஸ்பர்ஜன்

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


FRIENDS MISSIONARY PRAYER BAND

# அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...

சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

இயக்கத்தின் சார்பாக உங்கள் அனைவருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மற்றும் தரிசனத்தை மையப்படுத்திய கனிதரும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டு முழுவதும் நம் வாழ்விலும், ஊழியத்திலும் தேவன் உண்மையுள்ளவராய் இருந்ததைக் காணும்போது, **ஆண்டவரே நான் எம்மாத்திரம்!** என்று சொல்லத் தோன்றுகிறது. கிறிஸ்துமஸ் என்பது பரலோகத் தந்தையின் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் உள்ளான நம்முடைய முழுமையான கீழ்ப்படிதலைக் குறிக்கிறது. கீழ்ப்படிதலினால் குமாரன் தன் மகிமையை விட்டுவிட்டு மனிதகுலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தார்; உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தபோதிலும் மரியாளின் கீழ்ப்படிதல் குமாரனை இந்த உலகத்திற்கு கொண்டு வந்தது; பல நிச்சயமற்ற சூழ்நிலைகளின் மத்தியில் யோசேப்பின் கீழ்ப்படிதல் குழந்தை இயேசுவைப் பாதுகாத்தது. கீழ்ப்படிதலினாலே யோசேப்பு மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டு தாய் மற்றும் குழந்தையுடன் எகிப்துக்குச் சென்றார். மத்தேயு 2:14 கூறுகிறது, "அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுபோய்..." தேவதூதரின் வார்த்தையைக் கேட்டு ஒரே நாளில் வேறொரு நாட்டுக்கு தப்பிச்செல்ல மகத்தான விசுவாசமும், கீழ்ப்படிதலும் தேவைப்பட்டது. யோசேப்பு தேவனுடைய வழிக்காட்டுதலுக்குக் கீழ்ப்படிந்ததினால் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் நிறைவேற முடிந்தது. இந்த கிறிஸ்துமஸ் காலத்தில் நாமும் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையுமாக கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். ஏனென்றால் நம் வாழ்வில் தேவனுடைய சித்தம் என்பது அவரது மகத்தான திட்டங்களின் ஒருபகுதியாகும்.

**நிலத்தில் விழுந்த கோதுமை மணி:** 5 ஆண்டுகளாக புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்று வந்த நமது அன்புக்குரிய மிஷனெரி அருள்திரு. தீப்திலால் மாலி 17.11.2024 அன்று மதியம் 2.15 மணிக்கு தேவனுடைய ராஜ்யம் சென்றடைந்தார். நித்திய ஜீவனுக்கென்றும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்றும் அவரது உடல் 18.11.2024 அன்று சென்னையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் பஞ்சாப் மாநிலத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்து வந்தவர். இவர் விட்டுச் சென்றுள்ள அவரது மனைவி திருமதி. ரேணுமா சடாங்கி மற்றும் 6ஆம் வகுப்பு படிக்கும் மைக்கேல், மூன்றாம் வகுப்பு படிக்கும் இஸ்ரேல் ஆகியோரை நம் ஜெபத்தில் தாங்குவோம். பஞ்சாப் மாநிலத்தில் அருட்திரு. தீப்திலால் மாலி விட்டுச்சென்ற ஊழியத்தைத் தொடர அநேக வாலிபர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

**தமிழ் நாடு பணித்தள ஊழியர்களுடன் சந்திப்பு:** அக்டோபர் 22-24 தேதிகளில் தமிழ் நாடு பணித்தள ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் சபை

மூப்பர்களை சந்தித்தேன். இக்கூட்டம் ஆசீர்வாதமாக முடிந்தது. மூப்பர்கள் புத்துணர்வைப் பெற்றுக்கொண்டு தங்கள் மக்களை நற்செய்தியின் மூலம் சந்திக்க தீர்மானித்தனர்.

**மத்திய மண்டல ஊழியர்களின் ஆவிக்குரிய கூடுகை:** நம் இயக்கத்தின் தரிசன பூமியான பெரியமலையில் அக்டோபர் 25-27 தேதிகளில் மத்திய மண்டலத்தில் பணிசெய்யும் நம் ஊழியர்கள் தங்கள் வருடாந்திர ஆவிக்குரிய கூடுகைக்காக குடும்பமாக கூடி வந்தார்கள். இக்கூடுகையில் தேவனுடைய வார்த்தை ஊழியர்களின் உள்ளங்களில் ஆழமாக கிரியைச் செய்தது.

**மிஷன் மாநாடு, டெல்லி:** நமது ஊழியர்களும், விரிவுப்பணி தன்னார்வ தலைவர்களுமாக ஒழுங்கு செய்த ஒருநாள் கூடுகை அக்டோபர் 31-ம் தேதி டெல்லியில் நடைபெற்றது. இக்கூடுகையில் தேவனுடைய பிரசன்னம் நிறைந்து காணப்பட்டது.

**உத்தரகாண்ட் மற்றும் ஹரியானா மாநில ஊழியங்கள்:** நவம்பர் 1 முதல் 6ஆம் தேதி வரை பணித்தள தலைவர்களுடன் இணைந்து உத்தரகாண்ட், ஹரியானா மாநிலங்களில் பணி செய்யும் நமது ஊழியர்களைச் சந்திந்தோம். இந்த சந்திப்பின் மூலம் குறிப்பாக உத்தரகாண்ட் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

**ராஜஸ்தான் பொன்விழா ஆண்டு:** நவம்பர் 5ஆம் தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் நமது ஊழியத்தின் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவையும், ஹனுமன்கார் பணித்தளத்தில் கட்டப்பட்ட ஆலயத்தின் 25ஆம் ஆண்டு விழாவையும் மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகள் இணைந்து கொண்டாடினார்கள். இக்கொண்டாட்டத்தில் விசுவாசிகளும், தலைவர்களும் சுவிசேஷத்தை அறியாதோருக்கு எடுத்துச் செல்ல உற்சாகப்படுத்தப்பட்டனர்.

**செயற்குழு கூட்டம்:** நமது இயக்கத்தின் 221வது செயற்குழு கூட்டம் 2024 நவம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.

**தேசிய மிஷன் மாநாடு, ஹைதராபாத்:** நவம்பர் 13-15 தேதிகளில் ஹைதராபாத் மாநகரில் நடைபெற்ற தேசிய மிஷன் மாநாட்டில் நூற்றுக்கணக்கான இயக்கங்களைச் சேர்ந்த 850 பேருக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இம்மாநாடு ஆசீர்வாதமாக அமைந்தது.

**டிசம்பர் மாத ஊழியங்களுக்காக உங்கள் ஜெபம் வேண்டுகிறேன்**

**துறை செயலாளர்கள் கூட்டம்:** டிசம்பர் 1-4 வரை துறை செயலர்களின் உபவாச ஜெபமும், திட்டமிடுதலும் பெரியமலையில் நடைபெறவுள்ளது.

**ஊழியர்களின் குருத்துவ அபிஷேகம், ஜார்கண்ட்:** டிசம்பர் 11ஆம் தேதி ஜார்கண்ட்டில் வடக்கு இவாஞ்சலிகல் லுத்தரன் சபை (NELC) மூலம் நமது மிஷனெரிகளும், சுதேச ஊழியர்களும் குருத்துவ அபிஷேகம் பெறவுள்ளனர். நமது ஊழியத்தை வலுப்படுத்த உதவி செய்யும் NELC பிரதம பேராயர், பேராயர் மற்றும் செயலாளர் யாவருக்கும் நம் இயக்கம் நன்றியைத் தெரிவிக்கிறது. குருத்துவ அபிஷேகம் பெறும் ஊழியர்களின் மூன்று நாள் பயிற்சி மற்றும் அபிஷேக ஆராதனைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**ஜார்கண்ட் விஜயம்:** குருத்துவ அபிஷேகம் நடைபெறும் நாட்களுக்கு முன்னும் பின்னும் மால்டோ மற்றும் சந்தால் பணித்தளங்களைப் பார்வையிட இருக்கிறேன்.

**OTC போர்டு கூட்டம்:** ஜார்கண்டிலுள்ள கைராபானி சுவிசேஷ பயிற்சி மையத்தில் டிசம்பர் 10ஆம் தேதி NELC தலைவர்களும் இயக்கத்தின் தலைவர்களும் சந்திக்க திட்டமிட்டுள்ளோம்.

**சாங்வி விடுதி பிரதிஷ்டை:** மஹாராஷ்டிரா விலுள்ள சாங்வி விடுதியில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை டிசம்பர் 20ஆம் தேதி தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டைப் பண்ண உள்ளோம்.

**தமிழ் நாடு பணித்தள விஜயம்:** டிசம்பர் 27 முதல் 29 வரை தமிழ் நாட்டிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடுகிறேன்.

2024 வருடம் முழுவதும் தியாகமான ஈகையினாலும், ஊக்கமான ஜெபத்தினாலும் உங்களுடைய பங்களிப்பை நம் ஊழியத் திற்கு தந்ததற்காக உங்களுக்கு இயக்கமாக நன்றி செலுத்துகிறோம். வருடத்தின் கடைசி மாதத்திற்குள் பிரவேசித்துள்ள உங்களை இவ்வுலகை இரட்சிக்க வந்த இயேசு கிறிஸ்து தாமே ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம். கிறிஸ்துவின் இரட்சிப்பின் விடுதலையை நம் இந்தியர் அனைவரும் பெற்றுக்கொள்ள நாம் இணைந்து உழைப்போம். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

இவ்வாண்டு முழுவதும் தேவன் நம் வாழ்வில் செய்த மகத்தான நன்மைக்காகவும், வரும் 2025ஆம் ஆண்டில் தேவன் நம் வாழ்வில் கொண்டு வரும் மகிழ்ச்சிக்காகவும் நம் இருதயத்தில் தேவனை உயர்த்திப் போற்றுவோம்.

தேவ ஊழியத்தில் உங்கள் உடன் ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

## நிதி அலுவலகத்திலிருந்து

**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**




A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு**

**QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# தேவகுமாரனை மனுஷகுமாரனாகப் பெற்றுக்கொண்டு,

## தேவனுடைய பிள்ளைகளாவதற்கு நாம் எம்மாத்திரம்?

*...தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலி.2:7).*

ஆம்! தேவகுமாரனை மனுஷ குமாரனாகப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய பிள்ளைகளாவதற்கு நாம் எம்மாத்திரம்? இந்த சத்துவமான கேள்வி தேவனுடைய கிருபையின் ஆழமான இரகசியத்தை நமக்குப் படம்பிடித்துக்காட்டுகிறது. தேவகுமாரன், பிதாவோடு நம்மை சமரசம் செய்ய மனுஷ குமாரனாக மாறுவதோடு, நம்மை தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக மாற்றுவது எவ்வளவு மகிமையானது! தேவன் தம்முடைய கிருபையினாலும், அன்பினாலும் இதை சாத்தியமாக்கினார். இவ்வுலகில் நூற்றுக்குநூறு மனிதனாகவும் தெய்வமாகவும் காணப்பட்ட இயேசுகிறிஸ்து நம்மை தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாகவும், தேவனுடைய சொந்த பிள்ளைகளாகவும் மாற்றுவதற்காக மனித சாயலானார். மனித வரலாற்றில் எந்த மனிதனும் இந்த மகிமையை சுயமாகப் பெற்றனுபவிக்க முடியாது.

பெத்லகேமில், இருதுருவங்களான 'தாழ்மையும் மகிமையும்' இணைந்தன. எவ்வளவு பெரிய தாழ்ச்சி இது! – பரலோக மாட்சிமையிலிருந்து பாதாளத்தின் படுகுழிக்கு; புகழின் உச்சத்திலிருந்து அவமானத்தின் அடிமட்டத்திற்கு; மேன்மையிலிருந்து சிறுமைக்கு; சிம்மாசனத்திலிருந்து சிலுவை மரத்திற்கு; கண்ணியத்திலிருந்து கடைநிலைக்கு; வழிபாட்டிலிருந்து வசைபாடல் நிலைக்கு; சொர்க்க வாசலிலிருந்து நரக வாசலுக்கு; பொன்முடி சூட்டலிலிருந்து முள்முடியணிதலுக்கு – இவ்வாறு மகிமையின் உயரத்திலிருந்து சிலுவையின் கோரத்திற்கு தேவகுமாரனாகிய கிறிஸ்து இவ்வுலகில் மனுஷகுமாரனாகப் பிறந்து பயணித்ததைப் பார்க்கிறோம்.

### 'இம்மானுவேல்' எனும் தனித்துவம் நிறைந்த பெயர்

வேதாகமத்தில் 'இம்மானுவேல்' என்கிற இப்பெயர் ஏசாயா 7:14, 8:8, மத்தேயு 1:23 ஆகிய மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 'இம்மானுவேல்' என்கிற பதத்தை சற்று ஆராய்ந்து பார்த்தால், அதில் மிகவும் ஆழமான

கருத்துக்கள் அடங்கியுள்ளதைக் காணலாம். ஒரு வேதவல்லுநர் ‘இம்மானுவேல்’ என்கிற வார்த்தையில்தான் தேவன் மனுக்குலத்தின்மீது கொண்டிருந்த இரட்சிப்பின் திட்டமும், மனித வாழ்வாதாரத்திற்கான அனைத்து தேவைகளும் அடங்கியுள்ளது என்பதாகக் குறிப்பிடுகிறார்.

பொதுவாக, ‘கடவுள் நம்மோடிருக்கிறார்’ என்று அனைத்து சமயங்களும் குறிப்பிடுவது இயல்புதான். அப்படியென்றால், ‘தேவன் நம்மோடிருக்கிறார்’ என்பதில் என்ன வித்தியாசம் உள்ளது என்கிற கேள்வி எழலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வார்த்தை, ஏதோ ஒரு நம்பிக்கையின் வார்த்தையாக, விடுதலையின் வார்த்தையாக, தீர்க்க தரிசன வார்த்தையாகக் குறிப்பிடப்பட்டு வந்தது. ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வார்த்தை கிறிஸ்து பிறப்பில் பயன்படுத்தப்பட்டிருப்பதின் மூலம் இது ஒரு புதிய அர்த்தத்தையும், ஆழமான கருத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. அதாவது, மனிதனை தமது சாயலாகப் படைத்து, நல்லது என கண்ட தேவன், அம்மனிதன் பாவம்செய்து அவரது சாயலை இழந்தபோது, அத்தேவனே மனிதசாயலாகி மனுக்குலத்துடன் சேர்ந்திருப்பதற்காக, அவர் தம்மை வெளிப்படுத்திய அழகிய நிலையே ‘இம்மானுவேல்’ என்கிற பெயரின் உட்கருத்தாகும். இதைதான் சி.எஸ். லூயிஸ் எனும் தேவமனிதர், ‘‘மனுமக்களை தேவப்பிள்ளைகளாக்க தேவகுமாரன் மனிதனானார்’’ எனக் குறிப்பிடுகிறார். ஆம், தேவன் மனிதனாக நம்மோடுகூட இருப்பதற்காக இம்மானுவேலரானார்!

## இம்மானுவேலரின் தனித்துவம் நிறைந்த ராஜாங்கம்

இம்மானுவேலரின் ராஜாங்கம் தனித்துவம் நிறைந்தது. இதைதான் மீகா தீர்க்கதரிசி “எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்” (5:2) என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்து ஒரு இளவரசராக அல்ல, பிறப்பிலேயே ராஜாவாக; அரண்மனையில் அல்ல, பெத்லகேம் எனும் ஒரு மிகச் சிறிய கிராமத்தில்தான் பிறந்தார். அவர் ‘தாவீதின் வம்சத்தில் வந்தார்’ எனக் கூறப்பட்டாலும், அவரது வம்ச வரலாற்றில் புறஜாதியான மோவாபிய பெண்ணான ரூத்தின் பெயரும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம் (மத்.1:5). அவர் ‘யூதர்களின் ராஜா’ என அழைக்கப்பட்டாலும், அவர் மாம்ச உறவின் அடிப்படையில் யூத இஸ்ரவேலர்களின் ராஜா அல்ல, ஆவியின் அடிப்படையில் அவரை ஏற்றுக்கொண்ட அனைத்து மக்களான புதிய இஸ்ரவேலர்களுக்கே அவர் ராஜா. ஆம், அவரை ஏற்றுக்கொண்ட அனைத்து மக்களுக்கும் அவர் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாகக் காணப்படுகிறார்.

மேலும், கிறிஸ்துவின் பூர்வீக தோற்றத்தை மீகா தீர்க்கதரிசி, “அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (5:2)’’ எனக் குறிப்பிடுகிறார். ஆம், இயேசு உலக தோற்றத்திற்கு முன்னரே காணப்பட்டார். அவர் ஏதோ சுமார் 2000 ஆண்டுகளாக காணப்படுகிற தெய்வம் இல்லை, அவர் நித்திய குமாரன். இவ்வுலகைப் படைக்கும்போது அவர் பிதாவோடு காணப்பட்டார். அதனால்தான் ஏசாயா தீர்க்கதரிசி “கர்த்தத்துவம் அவர்

தோளின்மேல் இருக்கும்" (9:6) என அவரைக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். அவர் நித்திய பிதா, அவருடைய ஆட்சிக்கு முடிவே இல்லை. இப்பிரபஞ்சத்தில் அவர் அனைத்து அதிகாரங்களையும், வல்லமைகளையும் ஒருங்கே பெற்றவர். ஆனால், அவருடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, அது நித்தியமானது. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, அவர் நம் நிமித்தம் தரித்திரரானார் (2 கொரி. 8:9) என பவுல் குறிப்பிடுகிறார். இவ்வுலகிலுள்ள ராஜாக்களின் இயல்புக்கு மாறாக, அவர் ஏழ்மையாக அடிமையின் ரூபத்தில் காணப்பட்டார். ஆம், இயேசு கிறிஸ்து ஏழைகளின் பக்கம் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். இம்மானுவேலரின் தனித்துவம் நிறைந்த ராஜாங்கத்தை நாமும் நமது வாழ்விலும், செயலிலும் அப்பியாசப்படுத்த இந்த கிறிஸ்மஸ் காலங்கள் நமக்கும் சிறப்பு அழைப்பு விடுக்கிறது.

## இம்மானுவேலரின் தனித்துவம் நிறைந்த அழைப்பு

தேவன் மனிதனாக இவ்வுலகில் பாலன் இயேசுவாகப் பிறந்தபோதே தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகில் தொடங்கப்பட்டுவிட்டது. எனவே தான், இயேசு கிறிஸ்து தமது முதல் பிரசங்கத்திலேயே "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15) என்றார். தேவராஜ்யத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து தமது பிரசங்கங்களிலும், பேச்சுகளிலும் 122 தடவை குறிப்பிட்டிருப்பதை வேதாகமத்தில் காணலாம். இயேசு இறையரசை இக்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் உரியதாகச் சித்தரிக்கிறார். இயேசுவின் பிறப்பின் மூலம் ஆவிக்குரிய நித்திய ராஜ்யம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. அதின் முழுமை எதிர்காலத்தில் பூரணமடையும் என அறிகிறோம். தேவனுடைய விருப்பம் என்னவெனில், இவ்வுலகிலுள்ள ஒரு ஆத்துமாகூட இந்த தேவராஜ்யத்தை அடையாது நரகத்தில் அழிந்துவிடக்கூடாது. அனைத்து முழங்கால்களும் தேவனுக்கு முன்பாக முடங்கவேண்டும்; அனைத்து நாவுகளும் 'இயேசுவே ஆண்டவர்' என அறிக்கை செய்யவேண்டும் என்பதுதான். இயேசு சீஷர்களுக்கு தாம் கற்பித்துக்கொடுத்த ஜெபத்தில்கூட 'அவருடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படவேண்டுமென்று' (மத். 6:10) ஜெபிக்கக் கற்றுக் கொடுப்பதைப் பார்க்கிறோம். தேவப்பிள்ளைகளாகிய நாம் தேவராஜ்யத்தின் குடிமக்களாக இருப்பதால், தேவராஜ்யம் இவ்வுலகத்திலிருந்தே ஸ்தாபிக்கப்படுவதற்கு உழைக்க அழைக்கப்படுகின்றோம். எனவே, நமது தேசத்தின் மக்கள் அனைவரும் இயேசு இரட்சகரின் பிறப்பின் வாயிலாக இம்மானுவேலராகிய மேசியா வந்துவிட்டார் என்பதை நம் மூலம் அறிந்துகொள்ள வேண்டும்.

## இம்மானுவேலரின் தனித்துவம் நிறைந்த நோக்கம்

கிறிஸ்து பிறப்பின் மையத்தில் ஒரு பெரிய மிஷனெரிப்பணியின் நோக்கமே அடங்கியுள்ளது. மிஷனெரிப்பணிக்கு கிறிஸ்துவின் பிறப்பும், வாழ்வும் ஒரு முன்னோடியாகும். வேதாகமத்தின் அடிப்படையில், மிஷனெரிப்பணிதான் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் மையமாக அமையவேண்டும். கிறிஸ்து தமது பிறப்பின் மூலம் ஒரு கலாச்சாரம் கடந்த மிஷனெரியானார். அதாவது, அவர் வானுலக கலாச்சாரத்தைத் துறந்து,

இப்பூவுலகின் கலாச்சாரத்தில் புகுந்து ஒரு பெண்ணின் வயிற்றில் வந்து பிறந்தார். இவரைப்போல் ஊழியம் செய்ய, நமது திருச்சபையும் கலாச்சாரம் கடந்த மிஷனெரிப்பணிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பாரெங்கும் மிஷனெரிகள் அனுப்பப்படவேண்டும். அப்பொழுதுதான் அனைத்து தேசமக்களும், பாஷைக்காரர்களும், இனமக்களும் கிறிஸ்துவின் பிறப்பினால் கிடைத்த இரட்சிப்பை அறிந்து பெற்றுக் கொள்ள அது ஏதுகரமாகும்.

கிறிஸ்துவின் முதல் வருகையை நாம் கொண்டாடும் போது, சுமார் 2000 ஆண்டுகளாகியும் இதுவரை அவர் முதல் வருகையைப்பற்றி ஒருமுறையேனும் கேள்விப்படாத மக்களுக்கு அவரை இரட்சகராக நாம் அறிமுகப்படுத்துவதின் மூலம், அவர்களையும் அவரது இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்தலாம். “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத். 28:20) என்ற கிறிஸ்துவின் வார்த்தையை மிகவும் சிறப்பான வாக்குத்தத்தமாக வேதப் பண்டிதர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவோடு வாழ்ந்த சீஷர்களுக்கு மட்டுமல்லாமல், சுவிசேஷத்தைப் பறைச்சாற்றுகிற அனைத்து தேவப்பிள்ளைகளுக்கும் உரித்தானதாகும்.

## நாம் எம்மாத்திரம்?

ஆம், இம்மானுவேலரின் தனித்துவமான மகிமையையும் வாக்குத்தத்தத்தையும் அடைய நாம் எம்மாத்திரம்? கிறிஸ்து பிறப்பின் மூலம் தெய்வமே மானிட லோகத்திலும், சரித்திரத்திலும் இடம் பிடிக்கிறார். குறிப்பாக, அவர் ஒவ்வொரு தனிநபரின் வாழ்வில் பிரவேசிக்கவும், இம்மானுவேலராக நம் ஒவ்வொரு வருடனும் மிக நெருக்கமான சொந்தமாக இருக்கவும் விழைகிறார். இயேசு கிறிஸ்துவே மகிமைக்கான ஒரே வழி! நாம் எல்லாரும் அவருடைய மகிமையைக் காணபதோடு, அம்மகிமையில் அவருடன்கூட நாமும் பங்குப்பெறவும் விரும்புகிறார். நாம் அவரது மகிமையின் சாட்சியாக அவருடைய தாழ்மையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், நமக்கு அந்த மகிமையின் கிரீடம் கொடுக்கப்படும்.

எனவே, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இப்புவியில் நிகழ்ந்த கிறிஸ்துவின் மகிமையை நாம் ஒவ்வொரு நாளும் பெற்று ''தேவன் அருளிய சொல் லிமுடியாத ஈவை'' (2கொரி. 9:15) அனுபவிப்பதற்கும், “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” என்ற அவரது உன்னதமான வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளியாவதற்கும் நாம் எம்மாத்திரம்? என்கிற இந்த ஓர் உயர் எண்ணமே இக்கிறிஸ்துமஸ் காலங்களில் நம்மைச் சிறப்பாய் ஆட்கொள்ள தாழ்மை யாய் ஒப்புக்கொடுப்போம். ஆமென்!

**– அருள்திரு. அறிவர். J.J. ஹாரிஸ்,**
FMPB தலைமைச் செயலக செயலாளர்.

### வாக்குதத்தத்தை நிறைவேற்றும் தேவன்

*மஹாராஷ்டிரா மாநிலம், இகத்பூர் பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி அனிதா ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியை. இவர் தினமும் ஆற்றைக் கடந்து பணிக்கு செல்வது வழக்கம். மழைக் காலத்தில் ஆற்றில் நீர் புரண்டோடுவதுண்டு. அன்றொருநாள் ஆற்றை கடக்க ஆரம்பித்த போது அடித்தளத்திலுள்ள தண்ணீர் முட்டளவுக்கு உயர்ந்து இடுப்பளவுக்கு வந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஏசா. 43:2 வசனத்தை கூறி சத்தமாக ஜெபித்தார். தேவன் அவரை பாதுகாத்து பத்திரமாக கரைசேர உதவி செய்தார். அல்லேலூயா!*

# பணித்தள விஜயம் & ஆலய பிரதிஷ்டை



சென்னை கே.கே. நகர் பகுதியிலிருந்து 10 பேர் கொண்ட குழுவாக 13.09.2024 அன்று மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள எட்டப்பள்ளி பணித்தளத்திற்குச் சென்றோம். அங்கு மார்கல் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்தை தேவ நாம மகிமைக்கென்று மங்கள படைப்பு செய்தோம். ஆலயம் கட்ட பண உதவி செய்த சகோ. D.N. ஜஸ்டின் & ஷிவாஜி பிரபாகரன் குடும்பத்திற்கு மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துதலையும் தெரிவித்துகொள்கிறோம். மறுநாள் ஞாயிறு இரண்டு குழுக்களாகப் பிரிந்து ஆராதனைகளில் கலந்துகொண்டு எங்களுடைய சாட்சிகளைப் பகிரவும், பணித்தள விசுவாசிகளின் ஜீவனுள்ள சாட்சிகளைக் கேட்கவும், ஆலப்பள்ளி சிறுவர் விடுதியில் தங்கி அவர்களுக்காக ஜெபிக்கவும் தேவன் கிருபைசெய்தார். 16.09.2024 அன்று விசுவாசியின் இல்லத்தில் ஊழியர்களோடு இணைந்து ஜெபித்தோம். பணித்தள விஜயம் சென்ற பத்து பேரும் புதிய சவால்களோடும், தரிசனங்களோடும், ஊழியர்களுக்காக, தேசத்திற்காக இன்னும் அதிகமாய் ஜெபிக்க வேண்டுமென்ற பாரத்தோடும் சென்னை திரும்பினோம்.

**திரு. T. ஆஸ்டீன்** – கௌரவ விரிவுப்பணி செயலர், கே.கே. நகர்

# சத்தீஸ்கர் ஆலயப் பிரதிஷ்டை




தேவனுடைய பெரிதான கிருபையால் 28.08.2024 அன்று சத்தீஸ்கர் மாநிலம், லக்கிம்பூர் பணித் தளத்திலுள்ள சித்கலோ கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட FMPB ஆலயம் மறைதிரு பாலமுருகன் (பிராந்திய செயலர், சத்தீஸ்கர்) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சென்னையைச் சேர்ந்த திரு. மகேஷ் & திருமதி பியூலா மகேஷ் குடும்பத்தினர் இவ்வாலயத்தை கட்டிக்கொடுத்து, திறந்து வைத்தனர். கும்மிடிபூண்டி மாவட்டத் தலைவர் திருமதி & திரு. ஜாண்சன் மற்றும் அவரது உறவினர் ஆலய பிரதிஷ்டையில் பங்குபெற்றனர். இவ்வாராதனையில் 200க்கும் மேற்பட்டோர் பங்குப் பெற்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. M. யோகராஜ்**
– விரிவுப்பணி செயலர், அம்பத்தூர்

# ஹூப்ளி பிராந்தியத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம்

## 1999 - 2024





அக்டோபர் 17, 2024 அன்று வெள்ளி விழா கொண்டாட்டம் பிராந்திய செயலர் ஆர். சுனில் குமார் அவர்களின் ஜெபத்தோடு தொடங்கியது. கலாச்சார உடையை அணிந்த பஞ்சாரா விசுவாசிகள் கலாச்சார நடனத்துடன் மலர்களைத் தூவி விருந்தினர்களை வரவேற்றனர். திருமதி. கவிதா திம்மேஷ் ஆரம்ப ஜெபம் செய்தார். பாடகர் குழுவினருடன் திரு. நரேந்திர குமார் தலைமையில் துதி ஆராதனை நடைபெற்றது. அருட்திரு. மஞ்ச்யா நாயக் அவர்களால் சங்கீத பாடம் வாசிக்கப்பட்டது. தலைவர்களை, பிராந்திய செயலர் மலர்மாலை அணிவித்து வரவேற்றார். '**நான் எம்மாத்திரம்**' (2சாமு. 7:18) என்ற தலைப்பில் நமது பொதுச் செயலர் தேவ வார்த்தையை பகிர்ந்துகொண்டார். அதனை அருட்திரு. டேனியல் விஜயராஜ் கன்னட மொழியில் மொழிப்பெயர்த்தார். அதைத் தொடர்ந்து பஞ்சாரா கலாச்சார நடனம் நடைபெற்றது.

2-வது தேவ செய்தியை உள்ளூர் போதகரும், FMPB ஆதரவாளருமான பா. ஓபுல்ராவ், அப். 7:20-22 வசனங்களைக் கொண்டு பேசினார். அதனைத் தொடர்ந்து அனைத்து விசுவாசிகள் மற்றும் சமிதி அங்கத்தினர் சார்பில் விருந்தினர்களுக்கு சால்வைகள் மற்றும் மைசூர் தலைப்பாகை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் வெள்ளி விழா நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. விசுவாசிகளின் குழந்தைகளின் சிறப்பு நடனம் கூடிவந்தவர்களை மகிழ்வித்தது. பிராந்திய திருச்சபை வரலாற்றை திரு. சாம்ராட் (சமிதி பொருளாளர் & ஷிரஹட்டி சபை மூப்பர்) வாசித்தார். அருட்திரு. கென்னத் கரியப்பா 1993இல் இந்த பிராந்தியத்தில் முன்னோடி மிஷனெரியாக இருந்தார். முதல் பணித்தளம் முண்டர்கி



மற்றும் முதல் ஆலயம் ஷிரஹட்டியில் கட்டப்பட்டது. இது 1999இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. முதல் கலாச்சாரங்கடந்த மிஷனெரி அருள்திரு. டேவிட் பெருமாள், முதல் பிராந்திய செயலர் அருள்திரு. என். ஜே. சுமந்தா, முதல் மண்டல செயலர் அருட்திரு. வி. தாமஸ், ஊத்தங்கரை, முதல் விசுவாசி திரு. நந்து ரத்தோடு. இவர் பஞ்சாரா சமூகத்தைச் சேர்ந்தவர்.

அனைத்து மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு பொதுச் செயலர் மற்றும் மண்டல செயலர் சால்வை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தனர். தேவாலயம் கட்டுவதற்கு இலவசமாக நிலத்தை வழங்கிய உள்ளூர் நன்கொடையாளர் திரு. பக்கிரேஷ் கப்துனாவர். 3-வது செய்தியை யோ. 2:1-11 வசனங்களை மையப்படுத்தி நமது பொதுச் செயலர் கொடுத்தார். மேலும் அவர் தேசத்திற்காக ஜெபிக்கவும், விசுவாசிகள் தங்கள் சொந்த ஜனத்திற்கு நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் ஊக்குவித்தார். நிறைவாக பொதுச் செயலர் ஜெபிக்க மண்டல செயலர் அருள்திரு. திம்மேஷ் ஆசி வழங்கினார். இந்த கொண்டாட்டத்தில் சுமார் 885 பேர் கலந்துகொண்டனர். அனைத்துப் பணித்தளங்களிலிருந்தும் விசுவாசிகள் உற்சாகத்துடன் இக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர். விழாவானது துவக்க முதல் முடிவுவரை எவ்வித தடையுமின்றி ஆசீர்வாதமாய் நடைபெற உதவி செய்த தேவனை நன்றியோடு துதிக்கின்றோம். இவ்விழாவை சிறப்பித்த இயக்கத் தலைவர்கள், சமிதி உறுப்பினர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துகொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. திம்மேஷ்,** தென் மண்டல செயலர்.



# தீபாலயா சிறுமியர் விடுதி பிரதிஷ்டை

டாக்டர். ஜி. ரூபல்லோ சாமுவேல் குடும்பத்தினரின் பொருளாதார உதவியால், உத்தரப்பிரதேசம், பூடா கிராமம், ஜான்சியில் பெண் பிள்ளைகள் தங்கி படிக்கிறதற்காக **தீபாலயா** என்ற விடுதி கட்டப்பட்டு 27.09.2024 அன்று தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் டாக்டர் ரூபல்லோ சாமுவேல் குடும்பம், திரு. எஸ்.கே. தாமஸ், அருள்திரு. பொன்னுசாமி, அருள்திரு. ராஜதுரை மற்றும் மிஷனெரிகளும் கலந்துகொண்டனர். மேலும் விடுதிப் பிள்ளைகளுடன் பயிற்சி மிஷனெரிகளும், பணியாளர்களும் இணைந்து பல நிகழ்ச்சிகளை நடத்தி தேவனை மகிமைப்படுத்தி கூடுகையை சிறப்பித்தார்கள். தீபாலயா விடுதியில் தங்கி படித்து வரும் நம் விசுவாசிகளின் பிள்ளைகள் அனைவரும் நன்கு படித்து ஏசா.60:22இன் படி தேவனுக்கு சாட்சிகளாய் வாழ ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**திரு. எம். மனோகரன்,** கௌரவ பிராந்திய விரிவுப்பணி செயலர், சூளைமேடு, சென்னை.

# ஊழியர் பிரதிஷ்டை



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, கடலூர் பணி மாவட்டத்தின் சார்பில் அசாம் மாநிலத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி 22.09.2024 அன்று பண்ருட்டி அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் பாஸ்டர் திருமதி சாந்தி ரெபேக்கா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இவரை திரு. சுரேஷ் குடும்பத்தினர் ஜெபத்தினாலும், காணிக்கையாலும் தாங்கி வருகின்றனர். இந்த ஆராதனையில் அருட்திரு. ஜெயசேகர் (செயலர், தமிழ்நாடு வடக்கு மண்டலம்) அவர்கள் தேவ செய்தி மற்றும் மிஷனெரிகள் சந்திக்கும் சவால்களைப் பகிர்ந்துகொண்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. இம்மானுவேல் சைமன்** – கடலூர் பணி மாவட்டம்

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



1984ஆம் ஆண்டு முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜெபக்குழு தலைவராகவும், கௌரவ விரிவுப்பணி செயலராகவும் சிறப்பாக ஊழியம் செய்து பின்னர் 2005ஆம் ஆண்டு முதல் திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயல் பிராந்தியத்திலுள்ள தலைவர்களோடு சேர்ந்து மிக உற்சாகமாக செயலாற்றி வந்த திரு. கே.பி. முத்தையா அவர்கள் தனது 80–வது வயதில் 30.09.3024 அன்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் சென்றடைந்தார். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது மனைவி, மகன்கள், மகள்கள், பேரக்குழந்தைகள் மற்றும் உறவினர்களை தேவன் ஆறுதல்படுத்த ஜெபிப்போம்.

**திரு. என். ஜெயசேகர்**
– கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர், திருமுல்லைவாயல்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்ப கால ஜெபக்குழுத் தலைவர் திரு. தாமஸ் லட்சுமணன் (வயது 93, Ret. BHEL) அவர்கள் 04.10.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். திருச்சி கைலாசபுரம் ஜெபக்குழு தலைவராகவும், (ஜனவரி 1975–மே 1982) திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் FMPB மாவட்டத் தலைவராகவும், (ஜூன் 1982 – நவம்பர் 1990) தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் கௌரவ விரிவுப்பணி செயலாளராகவும் (பிப்ரவரி 1991 – அக்டோபர் 1997) பணியாற்றினார். 1988இல் திருச்சி ஜெபக்குழு சார்பாக ஜீப் (காலேப் ஜீப்) ஒன்றினை வாங்கி பணித்தளம் அனுப்பி வைத்தார். தனது கடைசி மூச்சு வரை FMPB ஊழியத்தை மிகுந்த அர்ப்பணிப்போடும், ஜெபத்தோடும் நிறைவேற்றினார். அவரது இரண்டு மகன்கள் திரு. ஜார்ஜ், திரு. சாம், மகள் திருமதி பிரபா மற்றும் பேரப்பிள்ளைகளின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. மணிமாறன்,** திருச்சி விரிவுப்பணி மண்டல செயலர்

# பணித்தள விஜயம்



திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் பகுதியில் இருந்து 02.10.2024 அன்று வாலிபர்கள் மற்றும் இளம் தம்பதியர்களாக 21 பேர் மத்திய பிரதேசம் காண்ட்வா பிராந்தியத்தில் நடைபெற்று வரும் நமது ஊழியங்களைப் பார்வையிடவும், ஜெபிக்கவும் சென்றோம். கடுமையான எதிர்ப்பின் மத்தியில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகளின் அர்ப்பணிப்பும், விசுவாசிகளின் உறுதியும் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. நாங்கள் நான்கு நாட்களாக சுமார் 1000 கி.மீ. தூரம் வாகனத்தில் பயணிக்கும் போது பிரதான சாலைகளில் ஒரு ஆலயத்தைக் கூட பார்க்க முடியாததினால் இங்கு மிஷனெரிப் பணி எத்தனை அவசியம் என்பதை உணர்ந்தோம்.

எங்களோடு முதன்முறையாக பணித்தளம் வந்த வாலிபர்கள் ஆதியிலே தேவன் செய்த அற்புதங்கள் இன்றும் நமது பணித்தளங்களில் நடந்து கொண்டிருப்பதை நேரில் கண்டு தேவனை மகிமைப்படுத்தினர். 04.10.2024 அன்று காண்ட்வா நகல்டா விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உபவாச ஜெபத்தில் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் பகிர்ந்துகொண்ட ஊழிய காரியங்களைக் கேட்டு உள்ளம் உடைந்து ஜெபிப்பதற்கு ஆவியானவர் உதவி செய்தார். சுவிசேஷத்திற்கு மக்கள் வாஞ்சையாய் இருந்தும் அவர்கள் மத்தியில் பணி செய்ய போதிய மிஷனெரிகள் இல்லாதது குறித்து கேள்விப்பட்ட போது இந்த மிஷனெரிப் பணிக்காக வாலிபர்கள் மத்தியில் ஜெபக்குழுக்களை உருவாக்கி ஜெபிக்கவும், மிஷனெரிகளை அனுப்பவும் தீர்மானம் எடுத்து திரும்பி வர ஆண்டவர் உதவி செய்தார்.

**திரு. D பென்னிங்டன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – திருநின்றவூர்.



## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

ஆந்திர மாநிலம் (தெலுங்கானா) செகந்தராபாத்திலுள்ள சைனிக்புரி பகுதியின் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுத் தலைவராக திரு. தர்மராஜ் ஐயா அவர்கள் நீண்ட காலம் பணியாற்றி, மிஷனெரிப் பணிக்காக காணிக்கை சேகரித்தும், மிஷனெரியைத் தாங்கி ஆதரித்தும், செவ்வாய் தோறும் குழுவாகக்கூடி ஊழியத்திற்காக ஜெபித்தும் வந்தவர். கடந்த 06.10.2024 அன்று தனது 97வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் இந்திய பாதுகாப்பு (Defence) Accounts அலுவலகத்தில் அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவர்களை பிரிந்து வாடும் அன்பு துணைவியார் திருமதி. சீலியா தர்மராஜ், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் கொள்ளுபேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

விரிவுப்பணி – செகந்தராபாத்

# ஆனந்த் பவன் பிரதிஷ்டை

## ரேனியஸ் தெரு அலுவலக கட்டிடம்



ஆசிரிய பணி செய்து வந்த திரு. ஆனந்த் செல்லையா மற்றும் திருமதி மணி செல்லையா தம்பதியினர் நமது இயக்கத்தின் மீது மிகுந்த நேசம் கொண்டவர்கள். 1984இல் திரு. ஆனந்த் செல்லையா அண்ணன் தேவ ராஜ்யத்தை அடைந்த பின்னரும், திருமதி மணி செல்லையா அக்கா முருகன்குறிச்சி பகுதியில் காணிக்கை சேகரித்தும், ஜெபக்குழுவை நடத்தியும் வந்தார்கள்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு அலுவலக கட்டிடத்தின் தேவையை உணர்ந்த திருமதி மணி அக்கா 1994ஆம் ஆண்டு தான் வசித்து வந்த (9, ரேனியஸ் தெரு) வீட்டை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கத்திற்கு இலவசமாக அர்ப்பணித்தார். அந்த நாள் முதல் நமது நெல்லை விரிவுப்பணி அலுவலகம் 9, ரேனியஸ் தெரு கட்டிடத்தில் இயங்கி வந்தது. அக்கட்டிடம் தனது ஸ்திரத்தன்மையை இழந்துவிட்ட காரணத்தினால் அதை அகற்றிவிட்டு அதே இடத்தில் பதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கடந்த 2023ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் கட்டிடப்பணி நடைபெற்று வந்தது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இக்கட்டிடப்பணி இந்த ஆண்டு செப்படம்பர் மாதம் நிறைவு பெற்றது. இப்புதிய கட்டிடத்தின் பிரதிஷ்டை 18.09.2024 அன்று மாலை நமது இயக்கத்தின் தலைவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இயக்கத்தின் அநேக மிஷனெரிகளும், ஜெபக்குழுத் தலைவர்களும் கலந்து கொண்டு தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. ஜி. கிங்ஸ்லி,** தென்மண்டல விரிவுப்பணி செயலர் – நெல்லை.

# மகிமைக்குள் பிரவேசித்தார்



திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயல் பகுதியைச் சேர்ந்த மூத்த ஜெபக்குழுத் தலைவர் திரு. பாக்கியநாதன் ஐயா (தலைமை ஆசிரியர்) அவர்கள் 29.10.2024 (89 வயது) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஜெபக்குழுத் தலைவராக இருந்து தங்களுடைய ஜெபத்தினாலும், ஈகையினாலும் மிஷனெரிப் பணியை ஆதரித்து வந்தார். குஜராத் மாநிலத்தில் ஓர் ஆலயம் கட்டிக்கொடுத்தார். இளைய தலைமுறையினரை ஊழியத்தில் உற்சாகப்படுத்தியவர். அநேக மாணவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியவர். ஐயா அவர்களின் மூன்று பிள்ளைகளும் மிஷனெரி ஆதரவாளர்களாக உள்ளனர். ஐயா அவர்கள் விட்டுச்சென்ற இரண்டு மகன்கள், மகள் மற்றும் பேரப் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. என். ஜெயசேகர்,** கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர் – திருமுல்லைவாயல்



# பணித்தள விஜயம்

கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பணிமாவட்டம் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழு தலைவர்கள் ஏழுபேராக 06.10.2024 அன்று மஹாராஷ்டிரா விலுள்ள பெயிண்ட் பணித்தளத்தை பார்வையிடச் சென்றோம். மூன்று நாட்கள் மிஷனெரிகள் எங்களோடிருந்து அநேக கிராமங்களுக்கு அழைத்துச் சென்றனர். தேவ்டோங்ரா, புகர்பாடா ஆலயங்களைப் பார்வையிட்டோம். விசுவாசிகளுக்கு தொல்லை கொடுத்து, பொய் வழக்கிட்டோர் மனந்திரும்ப ஜெபித்தோம். மோட்டிபால்சனா சபையில் நடந்த உபவாச ஜெபக்கூடுகையில் கலந்துகொண்டு ஜெபிக்க தேவன் உதவி செய்தார். இக்கூடுகையில் சபை மூப்பர்கள், சுதேச ஊழியர்களாக சுமார் 200 பேர் கலந்துகொண்டனர். விகிரிபாடா ஆலயத்தில் செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார்.

நம் ஜெபங்களும், ஈகைகளும் வீண்போகவில்லை. அவை நூறு மடங்கு கனி கொடுத்திருப்பதைப் பார்க்க முடிந்தது. ஆராதனைகள் தெய்வீக ஆராதனைகளாக அமைந்திருந்தது. சரஸ்மால் விடுதியில் படிக்கும் பிள்ளைகள் விசுவாசத்திலும், நல்லொழுக்கத்திலும் வளர்க்கப்படுகின்றனர். பிள்ளைகளுக்காக பாரத்தோடு ஜெபித்தோம். 11.10.2024 அன்று நலமுடன் ஊர் வந்து சேர்ந்தோம். இந்த பணித்தள விஜயம் எங்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஊட்டுவதாக அமைந்தது.

**திரு. S. சத்தியராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – கருங்கல்

# பணித்தள விஜயம்



விழுப்புரம் பணிமாவட்டத்தின் சார்பாக 23 பேர் செப். 28ஆம் தேதி மஹாராஷ்டிரா மாநிலம் டெக்கான் பிராந்தியத்திலுள்ள ஆலப்பள்ளி பகுதிக்குச் சென்றோம். கடின, நீண்ட காடுகளினூடேயே பிரயாணம் மிகவும் சவாலாக இருந்தது. விசுவாசிகளின் சாட்சிகள் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. விசுவாசிகளின் அன்பு, வரவேற்பு மற்றும் விருந்து உபசரணைகள் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. தேவன் மேலுள்ள விசுவாசத்திற்காக அவர்கள் செலுத்தும் கிரயம் மற்றும் தியாகத்திற்கு முன் நாம் செலுத்தும் தியாகம் ஒன்றுமில்லை என உணர்ந்தோம். இங்கு ஊழியம் செய்யும் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் அர்ப்பணிப்பு எங்களை இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், கொடுக்கவும், அநேகரை ஜெபிக்க உற்சாகப்படுத்தவும் தீர்மானிக்க வைத்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. ரூபன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – விழுப்புரம் பணிமாவட்டம்



## பணித்தள விஜயம் & ஆலய பிரதிஷ்டை

கர்த்தரின் கிருபையினால் சந்தோஷபுரம் பணிமாவட்டம், தாம்பரம் பகுதியிலிருந்து செப்டம்பர் 30ஆம் தேதி ஜெபக்குழு உறுப்பினர்களாக ஏழுபேர், ஜார்கண்ட் மாநிலம் சென்றோம். தெலோ பணித்தளத்திலுள்ள ரங்கமாத்தியா கிராமத்தில், சந்தோஷபுரம் ஜெபக்குழு சார்பில் கட்டிமுடிக்கப்பட்ட ஆலயத்தை அக்டோபர் 3ஆம் தேதி தேவ நாம மகிமைக்காக மங்கல படைப்பு செய்தோம். அன்று நடைபெற்ற திருவிருந்து ஆராதனையானது சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்ட விசுவாசிகள் நிறைந்த அழகிய சங்கமமாய் இருந்தது. விசுவாசி தானியேல் மராயா ஆலயம் கட்ட தனது நிலத்தை மனமுவந்து கொடுத்துள்ளார். அக்டோபர் 2ஆம் தேதி மல்கான் கிராம மக்களோடு தேவனை ஆராதித்தோம். அக்டோபர் 4ஆம் தேதி பர்ஹர்வா சமுதாய கல்லூரியைப் பார்வையிட்டதோடு குடமு மலையில் ஒரு கிராமத்தையும் பார்த்துவிட்டு, ஆத்தும பாரத்தோடு அக். 6ஆம் தேதி சென்னை திரும்பினோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. D. ஜெபசீலன்,**
கௌரவ விரிவுப்பணி செயலர்
– சந்தோஷபுரம், தாம்பரம்




## பணித்தள விஜயம்

கர்த்தரின் பெரிதான கிருபையால் புதுச்சேரி மாநிலத்திலிருந்து 18 பேர் கொண்ட குழுவாக அக். 9ஆம் தேதி புறப்பட்டு ஒடிசா மாநிலம் சென்றோம். உத்கல் பிராந்தியத்திலுள்ள டென்கனால், தெல்கோய், ராய்ரங்பூர் ஆகிய பணித்தளங்களையும், ஜஷிப்பூர் சிறுமியர் விடுதியையும் பார்வையிட தேவன் உதவி செய்தார். அங்குள்ள ஊழியர்களின் தியாகமான ஊழியங்கள் மற்றும் விசுவாசிகளின் சாட்சிகள் எங்களுக்கு மிகவும் சவாலாக இருந்தது. ராஹுவாபில் மற்றும் தால்பேடா கிராமங்களில் ஆலயம் இல்லை. அங்கு ஜெபித்து ஆலயம் கட்ட தீர்மானித்து வந்தோம். கடைசியாக ஒடிசா மாநிலத்தில் இரத்த சாட்சியாக மரித்த கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளின் கல்லறை, வீடு மற்றும் தொழு நோயாளிகளின் விடுதி ஆகியவற்றைப் பார்த்து இன்னும் அதிகமாக ஒடிசா மாநிலத்திற்காக ஜெபிக்கவும், அநேகரை ஜெபிக்க உற்சாகப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்துடனும் 16ஆம் தேதி புதுச்சேரி வந்து சேர்ந்தோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. J.A. எபினேசர்,**
கௌரவ விரிவுப்பணி செயலர் – பாண்டி



# ஜார்கண்ட் பணித்தள விஜயம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் மேட்டுப்பாளையம் பணி மாவட்டத்திலிருந்து முதன்முறையாக 13 வாலிபர்கள் மற்றும் 8 பெரியவர்களாக 21 பேர் கொண்ட குழு கடந்த 09.10.2024 அன்று புறப்பட்டு 12ம் தேதி ஜார்கண்ட், பர்ஹர்வா வந்தடைந்தோம். அங்கிருந்து மிஷனெரிகளின் கல்லறை மற்றும் டோனிபிச்சகனி பகல் நேர சிறுவர் பராமரிப்பு மையத்தை பார்வையிட்டு, சோட்டாகக்ரியில் நடைபெற்ற வாலிபர் முகாமில் கலந்துகொண்டு உற்சாகமடைந்தோம். பிறகு புதிதாக கட்டப்பட்ட மருத்துவ மனைக்குச் சென்று ஜெபித்துவிட்டு, பந்தேனி விடுதியில் நடத்தப்பட்ட இரவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கர்த்தர் செய்த அற்புதங்களை ஊழியர்களின் மூலம் அறிந்து தேவனைத் துதித்தோம். 13ஆம் தேதி சந்தால் கெஸ்ரா ஆலயத்தில் விசுவாசிகளோடு இணைந்து ஆராதிக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் அன்பான உபசரிப்பைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். அது ஒரு புது அனுபவத்தை எங்களுக்குத் தந்தது. அதன் பின்பு கங்குபாடா சிறுவர் விடுதியில் நடைபெற்ற VBS இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம். சப்பாண்டே சிறுமியர் விடுதி, கடி பகுதியிலுள்ள சமுதாய கல்லூரியைப் பார்வையிட்டோம். அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும், ஆத்தும பாரத்துடனும் தங்கள் வாழ்வை தேவனுக்கென்று அர்ப்பணித்து ஜெபித்தோம். அதன் பிறகு நாங்கள் பர்ஹர்வாவிலிருந்து பிரயாணப்பட்டு சுகபத்திரமாக மேட்டுப்பாளையத் திற்கு வந்துசேர தேவன் கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**அருட்திரு. எசேக்கியா,** விரிவுப்பணி அலுவலகம் – மேட்டுப்பாளையம்

# மகிமைக்குள் பிரவேசித்தார்



சின்ன சேலம் பகுதியின் ஜெபக்குழுத்தலைவராக கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக செயல்பட்டு வந்த திரு. தங்கராஜ் ஐயா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் கடந்த 15.10.2024 அன்று இறைவனின் அழைப்பை பெற்று இந்த உலக ஓட்டத்தை முடித்தார். அவர்கள் செய்துவந்த ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து, அன்னரை இழந்து துக்கத்திலுள்ள குடும்பத்தினர்களுக்கு தேவன்தாமே சமாதானமும், ஆறுதலும் தர ஜெபிப்போம்.

**அருள்திரு. செல்வின் ஜெசுதாஸ்,** விரிவுப்பணி செயலர் – பாண்டிச்சேரி




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா மாங்வெய் ஃபோம்
செல்வி. ஜுன்மோனி மிலி

# ஜம்மு

## உதம்பூர்:

### அருண்காந்தா & ரேணு காந்தா

**துதிக்க:** இரண்டு பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ஐந்து புதிய கிராமங்களில் இரவு கூட்டங்கள், திரைப்பட ஊழியம், வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலமாக சுமார் 1250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ராஜேந்திரசிங்கின் தந்தை விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதால் தற்போது அவரது குடும்பம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஆலயத்திற்கு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான உதம்பூர் நகரைச் சேர்ந்த பிரவிந்தர் சிங் மற்றும் ராம்நகர் கிராமத்தைச் சேர்ந்த சோரவ்குமார் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சானா தேவிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; ராஜேந்திர சிங், குர்பிரீத் கௌர், ஹஸ்பிரீத் கௌர், ஜகதீஸ் சிங் குடும்பம் மற்றும் தர்ஷனா தேவி குடும்பம் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட ஜெபிப்போம்.

## நௌஷேரா:

### ஷேக் சுபானி & எமி பாக்கியா

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். ஐந்து இடங்களில் படக்காட்சி ஊழியம் நடத்த தேவன் கிருபை செய்தார். பின்தொடர்ப்பணியின் மூலம் பள்ளி கிராமத்தில் ஐந்து புதிய தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். ஜோலாப்பூர் கிராமத்தில் வசிக்கும் புலம்பெயர்ந்த விசுவாசிகளின் மூலம் ரஜோரி மாவட்டத்தில் புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12 வருடங்களாக முதுகுத் தண்டுவட பிரச்சனையினால் நடக்க இயலாமலிருக்கும் புதிய தொடர்பாளரான பால்யான் கிராமத்தைச் சேர்ந்த சுனிதாவுக்கு தேவன் அற்புத சுகமருள; கெனிட்டி கிராமத்தைச் சேர்ந்த சபை மூப்பர் சுமாஷ் விசுவாசிகளை தவறான வழியில் நடத்துவதோடு, பிறர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தடையாகயிருக்கிறார். தேவன் இவரது இருதயத்தில் கிரியை செய்ய; கலால் கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்தர் குடும்பம் எதிர்ப்பினிமித்தம் ஆலயத்திற்கு வர தயங்குகிறார்கள். தேவன் இவர்களுக்கு தைரியத்தின் ஆவியைக் கட்டளையிட; ரஜோரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் அதிகளவில் வாழும் முகமதியர் மத்தியில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் ராஜதுரை
திருமதி. புஸாரே ஷைலா சிந்தாமன்
திரு. தாங்பியாக்முவான்
திருமதி. அனாமிகா பெகு நெகேமியா

### சம்பா: அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் சுமார் 820 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். பங்லார், பொங்வால், ராக்கா ஆகிய கிராமங்களில் நற்செய்திக்கு மக்கள் வாஞ்சைக்காட்டி வருகின்றனர். ரீட்டா தேவியை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினார். பட்யாரி கிராமத்தில் ஆராதனைக்குழு ஆரம்பிக்க வாஞ்சைகாட்டும் அக்கிராம விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹிராநகர், கக்வால், பொங்வால், ராஜ்புரா மற்றும் அருகாமையிலுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; கூட்டக் கிராமத்தில் ஞாயிறு ஆராதனையை நிறுத்த முயற்சி செய்வோர் மற்றும் நமது ஊழியங்களுக்கு இடையூறு செய்வோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசிகளின் மத்தியில் ஒற்றுமை நிலவவும், விசுவாசத்தில் வளரவும்; அஸ்வினியின் குடும்பம் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சம்பா கிராமத்தைச் சேர்ந்த பப்லிதேவிக்கு புற்றுநோயிலிருந்து தேவன் பரிபூரண சுகம்தர; அசோக், ரோஷன், ராகேஷ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ் லாம்வுங்

**துதிக்க:** ஏழு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் 526 பேர் தேவனைப் பற்றி அறிந்துகொண்டனர். மூன்று பேர் கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு பெற்றுள்ளனர். கமலாதேவி என்ற விசுவாசி பால் கறக்க மாட்டுத்தொழுவத்திற்குள் சென்றபோது பெரிய நாகபாம்பு சீறிக்கொண்டு அவரை நோக்கி வந்தது. யாரும் உதவியற்ற நிலையில் தேவனை நோக்கி அபயமிட, பாம்பு அவளைத் தீண்டாமல் திரும்பிச் சென்றது. ஜெபக்குழுவினரின் விஜயம் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் உற்சாகத்தை கொடுத்துள்ளது. ராம்பூர் பகுதியில் பரவி வரும் டெங்கு காய்ச்சலிலிருந்து விசுவாசிகளையும், சுதேச ஊழியர் குடும்பத்தையும் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் ஆவிக்குரிய வாழ்வில் வளர; இரத்தப் புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்றுவரும் மோதிலாலுக்கு தேவன் அற்புத சுகமருள; குடிக்கு அடிமைப்பட்டுள்ள தேஜ்பகதூர் என்பவர் விசுவாசியான தனது மனைவி மற்றும் பிள்ளைகளை துன்புறுத்தி வருகிறார், அவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சந்தோஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் விசுவாசத்தில் நிலைத்துநிற்க; பாவ்தீப் மற்றும் புஷ்பேந்தர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; தேவன் விசுவாசிகளை கள்ள உபதேசங்களுக்கு விலக்கி பாதுகாக்க; வீடுகட்டுவதற்காக வாங்கிய ரூ. 7 இலட்சம் கடனை விரைவில் செலுத்த தேவன் சுனிலுக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா அன்ன சாந்தினி பிரைட்

## நேர்வா:

### எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுமார் 450 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் வேதாகமத்தை வாஞ்சையோடு பெற்றுக் கொண்டுள்ளார். 10 கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. எதிர்ப்பு களின் மத்தியிலும் ஜெபக்குழுவினரின் பணித்தள விஜயம் பாதுகாப்பாகவும், ஆசீர்வாதமாகவும் அமைய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஆலய ஆராதனையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு தவறாமல் கலந்து கொள்ள; டங்லேக் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசிகளை அவர்களது உறவினர்கள் மற்றும் கிராமத்தினர் இந்து சம்பிரதாயங்களைப் பின்பற்றும்படி வற்புறுத்தி வருகிறார்கள். விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்க; பரனு, பங்கல் மற்றும் அடல் சபை விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் மறுமலர்ச்சி அடைய; எதிர்ப்புகளினால் மனம் சோர்ந்துபோயுள்ள பங்கல் சபை விசுவாசிகளுக்கு தைரியம், பாதுகாப்பு மற்றும் விசுவாசத்தில் உறுதி ஆகியவற்றை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## ரிகாங்பியோ:

### சங்கர் ஏ. & ரூத் மேரி

**துதிக்க:** ஒரு புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மூன்று இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியமும், நான்கு இடங்களில் திரைப்பட ஊழியமும் செய்ய தேவன் உதவி செய்தார். பணித்தளத்தில் காணப்படும் எதிர்ப்பின் மத்தியிலும் நான்கு இடங்களிலிருந்து பணித்தளங்களைப் பார்வையிட வந்த நம் ஜெபக்குழுவினரை தேவன் பாதுகாத்தார். மலையோரத்தில் வேலை செய்துக்கொண்டிருந்த நமது விசுவாசி ராம்பியாரியை உருண்டு வந்த பாறைகளில் சிக்கிக்கொள்ளாதபடி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இதய துடிப்பு குறைவாக உள்ள பகத்சந்திற்கு பூரண ஆயுளை தேவன் அருள; விசுவாசிகளின் ஆப்பிள் தோட்டங்களில் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட; 5 மாத கர்ப்பிணியான நமது விசுவாசி ரஞ்சுவின் கர்ப்பப்பை மிகவும் பெலவீனமாக உள்ளது. மருத்துவ மனைக்குச் செல்ல சரியான சாலை வசதி யில்லாத சூழ்நிலையில் வாழும் இவருக்கு தேவன் தாமே பாதுகாப்பும், சுகப்பிரசவமும் அருள ஜெபிப்போம்.

## தண்ணீர் மருந்தானது

*மஹாராஷ்டிரா மாநிலம், கப்ராடா பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி திலிப்பாய். தன்னுடைய பூசணி தோட்டத்தில் இலைகள் பழுப்பு நிறத்தில் இருப்பதைக் கண்டு மனசோர்வுற்றார். அவர் கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து விசுவாசத்துடன் ஜெபித்து தன் தோட்டத்திலுள்ள செடிகளின் மேல் தெளித்தார். என்ன ஆச்சரியம்! மறுநாள் காலை அவர் பார்த்தபோது எல்லா செடிகளும் பசுமையாக செழிப்புடன் இருப்பதைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்.*




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பேபி செலினா அருள்ராஜ்

# பஞ்சாப்

## மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** பத்தாகலன், அளிகாகுர்ட், மோதா மற்றும் சோட்டாஜண்டா ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஆறு குடும்பங்கள் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து சபையில் இணைந்தனர். பூலாசிங்கின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். சபை மூப்பரான குல்வந்த்சிங் ஆலய காரியங்களிலும், ஊழியத்திலும் அதிக உற்சாகம் காட்டி வருகிறார். மான்சா பணித்தளத்தில் வரும் நாட்களில் செய்யவிருக்கும் ஊழியங்களை கூடி ஜெபித்து திட்டமிட தேவன் கிருபை செய்தார். கடந்த நாட்களில் திட்டமிட்டபடி அனைத்து ஊழியங்களையும் நிறைவேற்றிட மிஷனெரிகளுக்கும், சுதேச ஊழியர்களுக்கும் கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் தேவனை விசுவாசிக்கவும், புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும்; கடும் வயிற்று வலியினால் வேலை செய்யமுடியாமல் கஷ்டப்படும் சம்மிசிங் விரைவில் சுகம்பெறவும், அவரது பச்சிளம் குழந்தையின் ஆரோக்கியத்திற்காகவும்; பத்தேபூர் ரமநாடி மற்றும் நஹோகி ஆகிய கிராமங்களில் நடைபெறவுள்ள படக்காட்சி ஊழியத்தின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வேலை நிமித்தம் இடம் பெயர்ந்து சென்றுள்ள விசுவாசிகள் ஆரோக்கியத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் பெலப்பட; ஷாம்சேர் சிங் நீரிழிவு நோயிலிருந்தும், பரமேஸ்வரி இரத்தப் புற்று நோயிலிருந்தும், குல்தீப்சிங், மெட்டோ கௌர், குருச்சரண் கௌர் ஆகியோர் உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும், டோனிசிங் வலிப்பு நோயிலிருந்தும், க்ரிப்பல்சிங் மூல வியாதியிலிருந்தும், ஊழியரின் தந்தை அருண் பிஸ்வாஸ் பக்கவாதத்திலிருந்தும் சுகம்பெற ஜெபிப்போம்.

## அஹ்மத்கட் மண்டி:

### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** சங்கேர் மற்றும் மட்டோய் கிராமங்களில் சுமார் 600 பேருக்கு சுவிஷேம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் மேளாவில் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். மூன்று பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். இரண்டு பெண்கள் கூட்டம், ஒரு வாலிபர் கூடுகை நடத்திடவும், மூன்று புதிய கிராமங்களில் இரவு கூட்டங்களின் மூலம் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்கு தேவன் தைரியத்தைக் கட்டளையிட; பலேவால், லட்டாலா, அலாம்க் ஆகிய கிராமங்களில் தேவன் புதிய தொடர்பாளர்களை எழுப்பித்தர; கல்லீரல் & மண்ணீரல் வீக்கம், குடலிறக்கம் ஆகிய பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள தர்மிந்தர், காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ரீனா, ஆஷ், ஜஸ்வீர், கர்ப்பப்பை கட்டியினால் பாதிக்கப்பட்டுள்ள மன்பிரீத் ஆகியோருக்கு தேவன் பூரண சுகம்தர; கைபேசிக்கு அடிமைப்பட்டுள்ள விசுவாச வாலிபர்கள் அதிலிருந்து விடுபடவும், ஏற்ற வாழ்க்கைத் துணை அமையவும் ஜெபிப்போம்.




## ராஜஸ்தான்

### காஜூவாலா:

**வி. குமார் &**
**பெட்ரிசியா தமிழ்ச்செல்வி**

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். புதிய தொடர்பாளர்களான சந்த்சிங், ஜஸ்வந்த், சுர்ஜித் கௌர் மற்றும் பரம்ஜீத் கௌர் தேவனை அறிந்துகொள்ள வாஞ்சைக் காட்டி வருகின்றனர். நமது விசுவாசி ஹர்ஷ்தீப்-க்கு சிங்கப்பூரில் படித்துக்கொண்டே வேலை செய்யும் வாய்ப்பை தேவன் அருளினார். விசுவாசிகளுக்கு இவ்வாண்டு நல்ல அறுவடையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் டங்கர்சிங் பூரண சுகம்பெற; கர்த்தார்சிங் முழுமனதோடு தேவனை ஏற்றுக்கொள்ள; பரம்ஜீத்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அருள; ஒரு வருடமாக இனம்புரியாத வயிற்றுப் பிரச்சனையில் அவதியுறும் பூணம் சுகம்பெற; சோனுபாயின் மகன் லேக்ராம் மனந்திரும்ப; ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள வாலிபர்களை தேவன் எழுப்பித்தரவும், எதிர்ப்பைச் சந்திக்கும் ஊழியர்களுக்கு தேவன் பாதுகாப்பை அருளவும் ஜெபிப்போம்.

### ஹனுமான்கட்:

**முதவத்து ராஜு நாயக் &**
**புக்கியா ஜான்சிபாய்**

**துதிக்க:** குஞ்சா ஐ.டி.ஐ. காலனியைச் சேர்ந்த இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரின் மந்தையில் இணைந்துள்ளனர். இரண்டு வேதாகமங்களையும், 50 புதிய ஏற்பாடுகளையும் விநியோகிக்க தேவன் கிருபை செய்தார். ரத்தன்புராடானி, புலச்சவாலா, பாலவாலிடானி, பர்ன்வாலி, எட்டாபுடா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மசானி கிராமத்தில் ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ராம்லீலா குழுவைச் சேர்ந்த சுமார் 250க்கும் மேற்பட்டோர் ஆலயத்திற்குள் புகுந்து பிரச்சனை செய்த எதிர்ப்பாளர்களிடமிருந்து விசுவாசிகளையும், ஊழியர்களையும் அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி சன்னிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் கட்டளையிட; வினோத் குமார் இருதயப் பிரச்சனையிலிருந்து சுகம் பெற; வேலை நிமித்தம் மும்பைக்குச் சென்றுள்ள ராஜ்குமார் அங்கு சந்தித்து வரும் பிரச்சனைகளிலிருந்து தேவன் அவரை விடுவித்து மன அமைதித்தர; பொன்விழா கொண்டாட்டத்தின் ஆயத்தப்பணிகள் தடையின்றி சிறப்பாய் நடைபெறவும், விழாவில் கர்த்தரின் நாமம் மகிமைப் படவும் ஜெபிப்போம்.

## 6 டிசம்பர் வெள்ளி

### சாங்ரியா:
### அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** ரத்தன்புரா கிராமத்தில் புதிய தொடர்பாளரான ஹனுமன் மற்றும் அவரது தாயார் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வாஞ்சைக்காட்டுகின்றனர். ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபித்து வருவதின் மூலம் ஜித்ராம் காசநோயிலிருந்து சுகம் பெற்று வருகிறார். நக்ரானா கிராமத்தில் எதிர்ப்பினிமித்தம் சிதறடிக்கப்பட்ட பழைய விசுவாசிகள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர். நக்ரானா கிராமத்தைச் சேர்ந்த ஜக்ஸீர் ஊழியத்தில் தந்துவரும் ஒத்துழைப்பிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நக்ரானா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க; ஹனுமான், கிருஷ்ணா, இந்தர், சர்வ்ஜித், ஒகில் ஆகியோர் தங்கள் விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட; பாம்பு கடியினால் கால் வீங்கி கஷ்டப்படும் பாகாசிங்க்கு தேவன் சுகம்தர; மார்பு கட்டிகளிலிருந்து குல்விந்தரையும், இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து காணப்படும் கிருஷ்ணாவையும், பேச, கேட்க முடியாமலிருக்கும் ராஜவந்தியையும் தேவன் குணப்படுத்த; விசுவாசிகளின் பிள்ளைகளான ஜோதி, ரீது, அமன்தீப் ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### தபுக்காரா:
### ஜான்சன் தமிழ் செல்வன் (ஓய்வு) & ராஜம்மாள், டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

**துதிக்க:** இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினிமித்தம் கிராமப் பஞ்சாயத்தால் அழைத்து விசாரிக்கப்பட்டபோது மனோஜ் மற்றும் அவரது குடும்பத்தினர் அக்கூட்டத்தின் முன் தைரியமாக தங்களுடைய சாட்சியை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் பெற்றோரின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு பிரவிந்தர் கௌருக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். விசுவாசியின் வீடு பிரதிஷ்டையின் போது சுமார் 50 பேருக்கு நற்செய்தி அறிவிக்கும் வாய்ப்பை தேவன் தந்தார். பருத்தி எடுக்கும் வேலையில் விசுவாசிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** விசுவாசிகள் தைரியத்துடனும், உற்சாகத்துடனும் சுவிசேஷத்தை அறிவித்திட; ஜுவானா மற்றும் லவிதா கிராமங்களில் சிறுவர் ஊழியத்திற்கு தேவன் திறந்தவாசலை அருள; குமார் பூரிலுள்ள குருத்வாரா கமிட்டி மூலம் விசுவாசிகளை கிராமத்தை விட்டு வெளியேற்ற முயற்சிக்கும் அவர்களின் திட்டங்களை தேவன் முறியடிக்க; சிக்கந்தர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலைப்பெற்று தன் மனைவியுடன் இணைந்து வாழ; 10 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் அஞ்சு நேத்ரமுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; கர்சன் கிராமத்தைச் சேர்ந்த நீரஜ்க்கு புற்றுநோயிலிருந்து தேவன் சுகமருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பீனாக்ஷி B. வசாவா சுனில்

திரு. பிதான் ஹன்ஸ்தா

# உத்தரகண்ட்

## நானக்மட்டா:

### ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** கிதோர், தலியாபூர் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் சுமார் 100 பேர் முதன்முறையாக நற்செய்தியைக் கேட்டுள்ளனர். விசுவாசி காஜல் பிரசவத்தின் போது இரத்தப் பற்றாக்குறையினால் ஆபத்தான நிலைக்குச் சென்றபோது ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தை தேவன் அருளினார். பச்சிபாடா கிராமத்தில் லவ்ஜோர் என்ற சிறுவனை பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலையாக்கினார். குடும்பப் பிரச்சனையினால் விஷமருந்திய சீமோனுக்காக ஜெபித்தபோது தேவன் அவரைப் பாதுகாத்தார். விபத்திலிருந்து சிம்ரோனை சிறு காயங்களுடன் தேவன் பாதுகாத்தார். கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் அஞ்சலிக்காக ஜெபித்தபோது அறுவை சிகிச்சையின்றி தேவன் சுகமளித்தார். குல்தீப்சிங்க்கு மின்சார ரிக்ஷா வாங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்கொலை ஆவியின் போராட்டத்திலிருந்து விம்லா கௌருக்கு தேவன் விடுதலை அருள; வெளிநாட்டில் வேலை வாங்கித்தருவதாக கூறி விசுவாசி பல்ஜீத்சிங்கிடமிருந்து பணம் பெற்று ஏமாற்றி வரும் நபர் மனந்திரும்பி பணத்தைத் திருப்பித்தர; குல்தீப்சிங் எதிர் பார்க்கும் வேலை விரைவில் கிடைக்க; ஹிமன்ஸ் அசுத்தாவின் பிடியிலிருந்து விடுதலைபெற; கத்தோலிக்கப் பள்ளியில் வேலை செய்யும் விசுவாசி அமீத் நிர்வாகத்தினால் புறக்கணிக்கப்படுகிறார், தேவன் இடைபட; அஞ்சலிக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருளவும், அவரது கணவர் தீயப்பழக்கத்திலிருந்து விடுபடவும் ஜெபிப்போம்.

## கிச்சா:

### பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** சுமார் 60 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். சக்தி மற்றும் கோமல் என்ற புதிய தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். 11 கிராமங்களில் பின்தொடர்ப்பணி செய்யப்பட்டுள்ளது. பந்த்நகர் கிராமத்தில் ஜேக்கப் மற்றும் அவரது குடும்பத்தினர் ஊழியத்திற்கு ஆதரவு தந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லால்பூர், நியூமங்கள், சஜானா, போடோரி, கிசான்புரா, போடோலி, பிரதாப்பூர், கிச்சா, சிமோலின், டோரேடாம், சாந்திபுரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்தவாசலை அருள; ஆலய ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; குருத்துவாரா மூலம் வரும் எதிர்ப்புகளினிமித்தம் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; நேபாளி காலனியில் ஊழியம் செய்ய எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கச் செய்ய; ருத்ராபூர் பகுதியில் ஊழியம் செய்ய தேவ் மற்றும் அவரது குடும்பத்தினர் ஒத்துழைப்புத் தர ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. டோன்ஸாசின், திருமதி. ரீனா ஆரோன்சிங்

# உத்தரப் பிரதேசம்

## கோண்டா சிறுவர் விடுதி:

### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி

**துதிக்க:** நான்கு கிராமங்களில் பின்தொடர்ப்பணி செய்யவும், மூன்று வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கவும் தேவன் கிருபை செய்தார். மிஷனெரிகள் இல்லாத நாட்களில் விடுதிப் பிள்ளைகள் அருகாமையிலுள்ள ஆலயங்களில் ஆராதனை நடத்த தேவன் உதவி செய்தார். நன்பாரா ஆலய ஆராதனையில் அநேகர் கலந்துகொள்கின்றனர். வித்யாராம் மற்றும் நட் இன விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் வளர்வதோடு அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்தி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரையாண்டு தேர்வை விடுதிப் பிள்ளைகள் நல்ல முறையில் எழுத; குளிர் காலத்தில் விடுதி பிள்ளைகளுக்கும், ஊழியர்களுக்கும் தேவன் சுகமருள; தில்காய், சம்பூதாரா, குக்குர்போக்வா, கீராவ்ரா, பல்வா, கங்காவால், நாத் நகர் ஆகிய கிராமங்களில் நடைபெறும் ஊழியங்களில் தேவன் நல்ல பலனைத் தர ஜெபிப்போம்.

## ஜின்ஜக்:

### சமரேந்திர சிங் & சுஸ்மித்தா, பும்சோன்சின் & லுன்சிங்

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுமார் 75 பேருக்கு முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இரண்டு பேர் கிறிஸ்துவுக்குள் மலர்ச்சிபெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். சலேம்பூர் கிராமத்தில் எவ்வித இடையூறுமின்றி விசுவாசிகளுக்கான கூடுகை நடத்தப்பட்டது. படோலி கிராமத்தில் கமலாவை அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் அனைத்து துணை மையங்களிலும் கிறிஸ்து பிறப்பின் நிகழ்ச்சிகள் தடையின்றி நடத்தப்பட; வாலிபர்கள் ஆலயக் காரியங்களிலும், ஊழியங்களிலும் உற்சாகத்துடன் ஈடுபட; ஜின்ஜக் பணித்தளத்தில் விசுவாசிகளின் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## ஜீவன் அருளும் தேவன்

*கர்நாடகா மாநிலம், ஷிக்காவ்ன் பணித்தளத்திலுள்ள பிரபு என்ற நம் விசுவாசிக்கு எதிராக செய்யப்பட்ட பில்லி சூனியத்தினால் அவர் விஷம் அருந்திவிட்டார். உடனடியாக அவரை மருத்துவனைக்கு கொண்டு சென்றபோது அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரை காப்பாற்ற முடியாது என்பதால் வேறு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்படி கூறினார். அடுத்த மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காததால் வீட்டிற்கு கொண்டு செல்லும்படி கூறிவிட்டனர். பிரபுக்காக விசுவாசிகள் ஊக்கமாக ஜெபித்தபோது தேவன் அற்புதம் செய்தார். காப்பற்ற முடியாது என்று சொன்ன அதே மருத்துவர் மீண்டும் சிகிச்சை அளித்தபோது தேவன் மரணத்தின் விளிம்பிலிருந்து பிரபுவை காப்பாற்றினார். அல்லேலூயா!*




# மத்தியப் பிரதேசம்

## பிண்ட்:

**ஜெபக்குமார் பி. & ஜெயந்தி கிரேஸ்**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுமார் 120 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வி, ஆத்தும ஆதாயப் பயிற்சி, சிறுவர்கள் & வாலிபர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. 8 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடைபெற்றது. சோனிக்கு தேவன் சுகப்பிரவத்தை அருளினார். 16 நாட்களுக்கு மேலாக காய்ச்சலில் கஷ்டப்பட்டு வந்த சாக்ஷி ஜெபத்தினால் சுகம்பெற்றாள். மழையினால் அநேகருடைய பயிர்கள் சேதமடைந்தபோதிலும் விசுவாசி ராம்சௌஹானின் பயிர் ஜெபத்தினால் பாதுகாக்கப்பட்டது. சர்வேஷ், ராஹூல், பரின்ஸ் ஆகியோருக்கு டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரியங்கா, அனிலின் மனைவி, ரஜ்வீர், கவுராவ் மற்றும் பூணமின் குடும்பத்தினர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கிட்டி, சக்ராய், கபீர்நகர் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் துவங்கப்பட; வாலிபர்கள் ஆலய ஆராதனையிலும், கிராம ஊழியங்களிலும் வாஞ்சைக்காட்ட; சுகவீனம் மற்றும் வேலையின்மை ஆகிய போரட்டங்களிலிருக்கும் விசுவாச குடும்பங்களில் தேவன் அற்புதம் செய்ய; சுனில் காசநோயிலிருந்தும், ராகேஷின் மனைவி சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், ஜெய் நாராயணன் சிறுநீரக பிரச்சனையிலிருந்தும், சமீர் நீண்ட நாள் தலைவலியிலிருந்தும் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

# பீஹார்

**ராணிகன்ஜ்: தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** மதேபூரா கிராமத்தில் கடந்த ஓராண்டாக எதிர்ப்பினிமித்தம் நிறுத்தப்பட்ட ஆராதனை மீண்டும் துவங்கிட கர்த்தர் கிருபை செய்தார். 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெங்களிதான் கிராமத்தைச் சேர்ந்த அஜய்தாஸை அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிர்சியாகலா பகுதியிலுள்ள மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்ட; மனநோயிலிருந்து சுக்னிதேவியின் மகன் படல்ரிஷிதேவ்க்கு தேவன் சுகமருள; ரீனுதேவி & மர்க்கூஸ் மண்டல் குடும்பத்தில் தேவன் சமாதானம் அருளி குடும்ப வாழ்வை ஆசீர்வதிக்க; மருத்துவ செலவினிமித்தம் அதிக பண நெருக்கடியிலிருக்கும் தேஜு ரிஷிதேவின் குடும்பத்திற்கு தேவன் உதவிசெய்ய ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் குல்லு

## ஜார்க்கண்ட்

### தல்பும்கட் விடுதி:

**வகேரா பிரமோத் குமார் & ஐஷோதாபேன்**

**துதிக்க:** காய்ச்சல், சிரங்கு, வயிற்றுப்போக்கு ஆகியவற்றால் அவதியுற்ற அனைத்து சிறுவர்களுக்கும் தேவன் சுகமருளினார். காலாண்டு விடுமுறைக்குச் சென்ற அனைத்துப் பிள்ளைகளும் பத்திரமாய் விடுதிக்கு திரும்பினர். பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றமடைந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் பூரண சுகம்பெற; விடுதியின் கட்டிட பராமரிப்புப் பணி விரைவில் முடிய; படிப்பில் மந்தமாக உள்ள சமீர் டாம்சாய், லட்டு லஹ்ரி, கோனோ சிங்கு, மொட்டாய் லஹ்ரி, ஜெய் டாம்சாய், ஈஸ்வர்பாய், செய்ரஸ் பிருலி ஆகியோருக்கு தேவன் ஞானமருள; விடுதி ஊழியர்களுக்கு தேவன் நல்ல சுகத்தை அருளவும், அர்ப்பணிப்போடு பணி செய்யவும் ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா:

**செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி**

**துதிக்க:** 26 புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதில் சுமார் 895 பேர் இயேசு கிறிஸ்துவை முதன்முறையாக அறிந்துகொண்டனர். 9 பேர் தேவனுடைய மந்தையில் இணைக்கப்பட்டனர். பாலேஸ்வர் மரையா அறுவைசிகிச்சையின்றி பூரண சுகம் பெற்றார். பலமாதங்களாக காணிக்கைத் தராமல் முரட்டாட்டம் செய்து வந்த சபை மூப்பர்கள் மனமாற்றம் பெற்று காணிக்கையை ஒப்படைத்தனர். மூன்று நாட்கள் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தை தேவன் ஆசீர்வதித்தார். பல தடைகளின் மத்தியிலும் இயேசு திரைப்பட ஊழியம் நடத்திட தேவன் கிருபை செய்தார். தால்ஜார்னி, குஷாகா, தபய், துல்சி டோலா ஆகிய பகுதிகளில் ஆத்துமாக்களை எழுப்பித்தருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடல் அறுவை சிகிச்சையில் ஏற்பட்டுள்ள தவறுதலினால் மீண்டும் சுகவீனப்பட்டுள்ள ஸ்ரீமதி முர்முவுக்கு தேவன் பரிபூரண சுகம் அருளவும், விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும்; முட்டு எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள லீல்முனிக்கு தேவன் அற்புத சுகமருள; சப்பாராம், நிப்போனியா ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் அருள; தபய் கிராமத்தில் தேவனை விசுவாசிப்போர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும், விரைவில் ஆராதனை துவங்கப்படவும் ஜெபிப்போம்.

11 டிசம்பர் புதன்

உபவாச ஜெபநாள்

### நோனிஹாட்: பென்ஹர் எம். & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** 26 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்துள்ளனர். படக்காட்சி ஊழியம் மற்றும் இரவு கூட்டங்கள், விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர் பயிற்சி ஆகியவை எவ்வித தடையுமின்றி நடைபெற தேவன் கிருபை செய்தார். கோபால் டுடு, லேவோ மராண்டி ஆகியோரை வலிப்பு வியாதி யிலிருந்தும், சுந்தர்லால் சோரனை மனநிலை பாதிப்பிலிருந்தும் தேவன் விடுவித்தார். பாபுஜி கிஸ்குவை விஷப்பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பதான், மன்டோல்டி ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் அருள; ஜெர்காவை மனநிலை பாதிப்பிலிருந்து தேவன் குணப்படுத்த; சிடிக் என்பவரை பயத்தின் ஆவியிலிருந்து தேவன் விடுவிக்க; மலோடி சோரனின் தாயார், அனில் முர்முவின் மகன், சானி முர்முவின் மகள் ஆகியோரின் ஆவிக்குரிய கண்களை தேவன் திறக்க ஜெபிப்போம்.

### பொடுவா விடுதி:

**சோன்பு சிங்சன் & டிங்நய்நேங்**

**துதிக்க:** விடுதியில் பணிசெய்யும் சுலேமான் பஹாரியாவின் மனைவிக்கு சுகப்பிரசவத்தில் குழந்தை பிறந்துள்ளது. விடுமுறை வேதாகமப் பள்ளி சிறுவர் களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. தானா புயலின்போது பழுதடைந்த மின்சார இணைப்பு ஜெபத்தின் மூலம் இரண்டு நாட்களில் சரிசெய்யப்பட தேவன் கிருபை செய்தார். மழை நாட்களில் வளாகத்திற்குள் வந்த விஷப் பாம்புகளிடமிருந்து விடுதிப் பிள்ளைகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் ஆவிக் குரிய கூடுகைகளின் மூலம் விடுதிப் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; இக்குளிர் காலங்களில் விடுதிப்பிள்ளைகளை சளி சாய்ச்சலி லிருந்து தேவன் பாதுகாக்க; விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கும் பிள்ளைகள் வெற்றி பெற்று முதலிடத்தில் வர; விடுதியில் பணிசெய்யும் ஏழு உள்ளூர் பணியாளர்களுக்கு தேவன் சுக பெலன் அருளவும், அர்ப்பணிப்போடு தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நிறை வேற்றவும் ஜெபிப்போம்.

## கிறிஸ்துவிடம் வழிநடத்தும் பூஜாரி

*மஹாராஷ்டிரா மாநிலம், பெயிண்ட் பிராந்தி யத்திலுள்ள துத்வெல் கிராமத்தைச் சேர்ந்த சுக்ரிபாய் கடுமையான வயிற்று வலியினால் அவதியுற்று வந்தார். அநேக பூஜாரிகளிடம் சென்றும் விடுதலை கிடைக்கவில்லை. தவ்லு என்ற உள்ளூர் பூசாரி அவளுக்கு சில மருந்துகளை கொடுத்தும் சுகமாகாத தால் அவர் அவரிடம், கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்களிடம் சென்று ஜெப உதவியை நாடுமாறு கூறினார். அவருடைய ஆலோசனையின்படியே சுக்ரிபாய் கிறிஸ்தவர்களிடம் சென்று தனக்காக ஜெபிக்கும்படி வேண்டினார். விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரை பூரணமாக குணமாக்கவே இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். அல்லேலூயா!*

## 12 டிசம்பர் வியாழன்

### பெல்டிஹறா:
### ரமேஷ் வேல்ராஜ் & பிரிசில்லாள்

**துதிக்க:** 64 பேர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைய கர்த்தர் கிருபை செய்தார். சுமார் 3400 பேர் முதன்முறையாக நற்செய்தியைக் கேட்டுள்ளனர். இரண்டு சபைகளில் பணித்தள அளவில் நடைபெற்ற ஆத்தும அறுவடை நிகழ்ச்சியில் சுமார் 235க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்டனர். 23 கிராமங்களில் நடைபெற்ற திரைப்பட ஊழியத்தின் மூலம் சுமார் 1850 பேர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். மண்டல அளவில் நடைபெற்ற சிறுவர் மாநாட்டில் கலந்துகொண்ட சிறுவர் பராமரிப்பு மையத்தின் பிள்ளைகள் தங்கள் வாழ்வை இயேசுவுக்கென்று அர்ப்பணித்துள்ளனர். புல்பாரி ஆலயக் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாக உள்ள 300 பேருக்காக; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயுள்ள கல்தேஸ்பூர் கிராமத்தைச் சேர்ந்த லால் ஹன்ஸ்தா, கஸ்தூரி கிராமத்தைச் சேரந்த போடின் சோரன், சோனகோர் கிராமத்தைச் சேர்ந்த குப்ராஜ் பெஸ்ரா, தர்ஜோலா கிராமத்தைச் சேர்ந்த பர்பதி பெஸ்ரா ஆகியோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வரும் லட்டே கிராமத்தின் மக்கள் இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; சுகாடி, துணியமரா கிராமங்களில் நடைபெறும் ஆலயக் கட்டமானப்பணிகள் தடையின்றி விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

### பகையா:
### ஜெபக்குமார் பெரியசாமி & பொன்லதா

**துதிக்க:** 19 பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ஷியா டிர்க்கியின் மகள் சபீனா மற்றும் அவரது சகோதரர் சர்குல் டிர்க்கி ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததினால் அவரது குடும்பம் முழுவதும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதோடு சர்குல் என்பவர் ஊழியத்தில் உதவி செய்தும் வருகிறார். ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற சந்தனி குஜுர் என்ற வாலிபப் பெண்ணின் குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக உள்ளனர். தவறான புரிதலினால் பின்வாங்கிப்போன ஆல்பர்ட் குஜுர் மீண்டும் ஊழியத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட ஆயத்தமாக உள்ள ஜைனத் மிஞ்ச், ராஜேஷ் குஜுர், ரஞ்சித் குஜுர், அர்ஜுன் கிண்டோ, ராம்நாதா குடும்பங்கள், ஜிதேந்தர், குஷ்பு, டாபுலால், ராம்ரத்யா, சஞ்சை எக்கா ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; கண்ணில் நீர்க்கட்டிக்காக சிகிச்சைப் பெற்றுவரும் எஸ்தர் மிஞ்ச், மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள ரீனா டோபோ, பக்கவாதத்தினால் கஷ்டபடும் குல்சா குஜுர், கர்ப்பப்பைப் பிரச்சனையினால் அவதியுறும் தித்தி மிஞ்ச் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

**13 டிசம்பர் வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜாஸ்மின் ஜுபராஜ்

# மேற்கு வங்காளம்

## கங்காராம்பூர்:

### தீஹே ஜேம்ஸ் & சரணி

**துதிக்க:** ஐந்து புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதின் மூலம் சுமார் 1460 பேர் முதன்முறையாக நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். எட்டு குடும்பங்கள் நற்செய்திக்கு வாஞ்சைக் காட்டுகின்றனர். ஏழு கிராமங்களில் எவ்வித தடையுமின்றி இயேசு திரைப்படம் திரையிடப்பட்டதின் மூலம் அநேகர் இன்னும் இயேசு கிறிஸ்துவை அறிய வாஞ்சைக்காட்டுகின்றனர். பனாபொக்கூர் ஆலயக் கட்டுமானப்பணி நல்லமுறையில் நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய ஆராதனைக்குழு நடைபெற்று வரும் சொகாட்டி கிராமத்தில் தற்காலிக ஆலயம் விரைவில் கட்டப்பட; பாபொங்காவன் கிராமத்தில் ஒருவர்பின் ஒருவர் மரித்து வருவதால் பயத்தில் வாழும் மக்களை தேவன் விடுவிக்கவும், அவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும்; வாலிபர்கள் ஆத்தும பாரம் பெற்று தேவனுக்காய் வைராக்கியமாய் வாழவும், அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அருளவும்; புதிய விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு தேவன் கல்வி கற்கும் வாய்ப்பை அருளவும், அவர்கள் எதிர்காலம் தேவனால் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

## பாலூர்ஹட்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், ரஞ்சன்

**துதிக்க:** பதிதாக மூன்று பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 15 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் செய்யப்பட்டுள்ளன. 4 இடங்களில் பெரிய அளவில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 960 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டுள்ளனர். மங்கல்பூர் கிராமத்தைச் சேர்ந்த சோனாலி முர்மு ஜெபத்தின் மூலம் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றார். வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட கூடுகையில் இளம் வயதினர் 14 பேரும், வாலிபர்கள் 6 பேரும், சிறுவர்கள் 5 பேரும் கர்த்தருக்கென்று பரிசுத்தமாய் வாழ்வோம் என்று தீர்மானித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒரு குடும்பம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரவேண்டும் என்ற திட்டம் வெற்றிபெற; சோம் கிஸ்கு மற்றும் சோகோல் ஷெம்ரோமின் குடும்பங்கள் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; முழுநேர ஊழியத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள ஸ்வபன் கிஸ்கு தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்க; ஜெயந்தோ முர்மு மனநலக் கோளாறிலிருந்தும், சுப்ரதோ முர்மு அட்டாக்ஸியாவிலிருந்தும் (கை கால்களில் தசை இணக்கமின்மை), சுனில் முர்மு வலிப்பு நோயிலிருந்தும் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ராணி ஜெஸிலெட் பால் ஆல்பர்ட்

## அஸோம்

### கோகாமுக் & தகுவாகனா:

**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்தனர். காய்ச்சல் மற்றும் இரத்தசோகையினால் பாதிக்கப் பட்ட ராதாமோனி கர்த்தரை விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகமருளினார். அசுத்தாவியின் பிடியினால் முரட்டாட்டமாய் நடந்துகொண்டு வீட்டைவிட்டு ஓடிப்போன ரோமிளாபயாங்-க்காக ஏறெடுக்கப்பட்ட ஊக்கமான ஜெபத்தினால் தேவன் பூரண விடுதலை அருளினார். பட்ரிசாங், புல்பரி, போர்த்மோலா, ஒரியோனி, கும்பாங் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்தவாசலை கட்டளையிட்டார். பிராந்திய அளவில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில், 110 பேர் கலந்து கொண்டதில் 54 பேர் தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆனந்த் பயாங் என்பவர் கடுமையான கண் பிரச்சனையினால் பார்வை இழந்து வருகிறார், தேவன் அவரது கண்களைத் தொட்டு குணப்படுத்த; மொமிதாவின் தாயும், அவரது சகோதரன் மஞ்சுவும் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தேவன் அவர்களது இருதயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த; நடைபெறவிருக்கும் தேடுவோர் முகாமில் அநேகர் கலந்துகொள்ள; தொண்டையில் சதை வளர்ந்து அவதியுறும் ஜோய்கேநோரோவை தேவன் குணப்படுத்த; விசுவாசி லோப்பாதாய் விசுவாசத்தில் வளரவும், அவரது கணவர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; இருமல், குறைவான இரத்த வெள்ளை அணுக்கள் மற்றும் இரத்தத் தட்டினால் அவதியுறும் மிஷனெரியின் மகள் லிசா மிராக்ளினுக்கு தேவன் அற்புத சுகம்தர தொடர்ந்து ஜெபிப்போம்.

### ஜோனாய்:

**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** மூன்று வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். இரண்டு வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகள் ஸ்கேன் கூடுகைக்கு சென்று பத்திரமாய் திரும்பி வர தேவன் கிருபை செய்தார். ஆலய ஆராதனையில் வாலிபர்கள் உற்சாகத்துடன் பங்கு பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில்லே, லெக்கு ஜெலாம் & ரிக்பி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; பாலி மற்றும் காளி கிராமங்களில் நடைபெற்று வரும் ஆராதனைக் குழுக்கள் சபைகளாக வளர்ச்சிபெற; அர்ப்பணமுள்ள சபை மூப்பர்கள் 10 பேரை தேவன் எழுப்பித்தரவும், 5 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை அருளவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் ரோஞ்ஜய் நர்சாரி

## சத்தீஸ்கார்

### ஹட்டி: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** கட்கோனா மற்றும் கிட்க்வாரி ஆகிய இடங்களில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் சபை மூப்பர்களோடு இணைந்து ஜெபித்தனர். ஐந்து புதிய கிராமங்களில் சுமார் 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரட்டியா இனத்தைச் சேர்ந்த மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அனைத்து ஆபத்துகளுக்கும் ஊழியர்களை விலக்கிக்காத்து, திட்டமிட்டபடி இரவு கூட்டங்கள், பஜன் கூட்டங்கள் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நரேஷ் ரட்டியாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து மோங்ரா ரட்டியாவுக்கு தேவன் விடுதலை தர; பக்கவாதத்திலிருந்து சகேல்சிங்கை தேவன் குணப்படுத்த; தேஜோபாயின் கணவர் மனந்திரும்பி தன் மனைவியுடன் இணைந்து வாழ; ரட்டியா மக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கவும், அவர்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிடவும்; மிஷனெரி நீத்துவின் தாயார் உயர் இரத்த அழுத்தம், சுவாச பிரச்சனை மற்றும் தலைவலியிலிருந்து சுகம்பெற ஜெபிப்போம்.

### காட்கோரா:

### வால்வி தினா தானா & புசாரே ஷைலா சிந்தாமண்

**துதிக்க:** 10 புதிய கிராமங்களில் சுமார் 230 பேருக்கு சுவிசேஷம் அறிவித்திட தேவன் கிருபை செய்தார். குருசியா கிராமத்தில் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நடத்தப்பட்டது. தேவ்சாயின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். எல்லாவித ஆபத்து, எதிர்ப்புகளிலிருந்து தேவன் ஊழியர்களை பாதுகாத்தார். விசுவாசிகளின் குடும்பக் கூடுகை, வேத வகுப்புகள், இரவு கூட்டங்கள், உபவாச ஜெபங்கள் யாவும் திட்டமிட்டபடி நல்ல முறையில் நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் லால்பூர், தங்காவன், சக்பாரி, தாஜக் கட்மூடா ஆகிய கிராமங்களில் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றிட; குன்வார், ஜித்தேன், நகார்சாய், முனிஸ்வர் ஆகியோரின் குடும்பங்கள் ஆலய ஆராதனையில் தொடர்ந்து பங்குபெற; விசுவாசிகளின் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; விசுவாசிகளின் மத்தியில் காணப்படும் பிரிவினைகள் நீங்கி ஒருமனதுடன் தேவனை ஆராதிக்க; டைபாய்டு காய்ச்சலிலிருந்து அஞ்சலிக்கும், குடிப்பழக்கத்திலிருந்து சுரேஷ்க்கும் தேவன் விடுதலையைக் கட்டளையிட; முனீஸ்வரனின் குடும்பப் பிரச்சனை நீங்க; அறுவடை நாட்களில் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், ஞாயிறு ஆராதனையை விட்டுவிடாமலிருக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கவிதா திம்மேஷ்
திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட்

## பாலோடா பஜார்:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** கிட்டாரிபாலி மற்றும் நயபாரா கிராமங்களில் முதன்முறையாக சுமார் 500 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கெய்ரி, பர்டோரி, அமலிடி, குய்ஹா ஆகிய கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. கம்ஹறியா கிராமத்தில் தேடுவோர் முகாம் நடத்த தேவன் கிருபை செய்தார். இரண்டு கிராமங்களில் வேதாகம வகுப்புகள் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டிரித்ரம், மெய்னா, கஜோல், சதுர்வேதி ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் செம்கிராடி கிராமத்தைச் சேர்ந்த ருச்சு, கிரிட்லாக்ரே, முல்சந்த்ரா, டஹேறியா மற்றும் துஜ்ராம் சோன்வானி மனந் திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; சத்தீஸ்கர் மாநிலத்தில் நிலவி வரும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான உபத்திரவங்கள், தாய்மதம் திருப்பும் நிகழ்ச்சிகள் முற்றிலும் நிறுத்தப்பட; கம்ஹறியா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் அருள; பலோடாபஜார் மாவட்டத்திலுள்ள 961 கிராமங்களிலும் விரைவில் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

## சீத்தாபூர்:

### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** 16 பேர் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளனர். புலேஸ் வரியின் குடும்பம் ஊழியம் செய்ய முன்வந்துள்ளனர். திபெத்திலிருந்து மெய்ன்பாத்திற்கு வேலை நிமித்தம் புலம்பெயர்ந்து வந்த மக்கள் மத்தியில் நற்செய்தி அறிவிக்க கர்த்தர் திறந்த வாசலை தந்துள்ளார். நடைபெற்ற வாலிபர் கூடுகையில் சுமார் 70க்கும் மேற்பட்டோர் பங்கு பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபை வாலிபர்களை சரியானப் பாதையில் வழிநடத்தவும், தங்கள் வாழ்வை பரிசுத்தமாய் காத்துக்கொள்ளவும்; 20 வயதான அமர்தீப் மனநிலை பாதிக்கப்பட்டு சங்கிலிகளினால் கட்டப்பட்டுள்ளான். மேலும் வினோத் யாதவ் மனநிலை பாதிக்கப்பட்டு போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளான். இருவருக்கும் தேவன் பரிபூரண விடுதலையைக் கட்டளையிட; அமர்சீலாவை வயிற்றுப் புற்றுநோயிலிருந்தும், கிஞ்சல் மற்றும் பர்மிளாவை இரத்தப் புற்றுநோயிலிருந்தும் தேவன் குணப்படுத்த; இதயம் மற்றும் நுரையீரலில் நீர்தேங்கியுள்ள மாஜினியின் தாயாருக்கு தேவன் அற்புத சுகம் அருள ஜெபிப்போம்.

**17**
**டிசம்பர்**
செவ்வாய்

## ஒடிசா

### ஜகன்நாத்பூர்:

**பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** 13 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் சுமார் 5547 பேர் இயேசு கிறிஸ்துவை குறித்து முதன்முறையாக அறிந்து கொண்டனர். 9 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். விசுவாசிகளும், சபை தலைவர்களும் இணைந்து டொண்டோ மற்றும் மஹாடிசாய் பகுதியிலுள்ள கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷம் ஊழியம் செய்தனர். பாராஜம்டாவில் பெண்கள் பயிற்சிக் கூடுகை நடைபெற்றது. சபைசார்ந்த பயிற்சி மையம் பாராஜம்டா ஆலயத்தில் தடையின்றி கட்டப்பட்டு வருகிறது. தன்னார்வ ஊழியர் கணஷியாம் குடும்பம் மற்றும் ரென்சோ குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர்ந்து நடைபெறவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழியம் நல்ல பலனைத் தர; ஜம்னாலி ஆலய ஆவணங்கள் நமது இயக்கத்தின் பெயரில் விரைவில் மாற்றப்பட; சுக்லால் லஹுரி வலிப்பிலிருந்தும், சும்புறு பிங்காவோ வலிப்பு மற்றும் காசநோயிலிருந்தும் பூரண விடுதலைபெற; வயிறு மற்றும் கால் வீக்கத்தினால் கஷ்டப்படும் ஜோவான்தோயிக்கு தேவன் சுகமருள; நடைபெறவிருக்கும் சபை மூப்பர்கள் பயிற்சி, புதிய விசுவாசிகளுக்கான பயிற்சி, வாலிப தலைவர்களின் பயிற்சி யாவும் பயனுள்ளதாய் அமைந்திட ஜெபிப்போம்.

## குஜராத்

### மோட்டாபண்டா:

**மார்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** ஜஸ்வந்த்பாய் (60 வயது) கண் அறுவை சிகிச்சை செய்த பின்பு கண்பார்வை மிகவும் மோசமானதால் ஆலயத்திற்கு வந்த இவர் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் தெளிவான கண்பார்வையைப் பெற்றுக்கொண்டார். ஐந்து புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருகின்றனர். ஜெபத்திற்குப்பின் கேசர்பென் குடும்பத்தில் தேவன் சமாதானத்தை கட்டளையிட்டுள்ளார். கக்கட்குவா கிராமத்தைச் சேர்ந்த தீபாலிபென் குடும்பம் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். இரவு கூட்டங்களின் மூலம் 35 பேருக்கு சுவிசேஷம் அறிவித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆராதனையில் கலந்துகொள்ளும் நவீன்பாய் குடும்பம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கோப்ரோலி கிராமத்தைச் சேர்ந்த பாபுபாய் பக்கவாதத்திலிருந்தும், பிரீத்திபேன் சுவாச பிரச்சனையிலிருந்தும், இஸ்திபேன் காது பிரச்சனையிலிருந்தும் தேவனால் குணப்படுத்தப்பட; புதிய விசுவாசிகள் நாளுக்கு நாள் தேவனை அறியும் அறிவில் வளர; சுதேச ஊழியர்களின் பிரயாணப் பாதுகாப்பிற்காகவும், உற்சாகத்துடன் ஊழியத்தை நிறைவேற்றவும் ஜெபிப்போம்.

**18**
**டிசம்பர்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

## அஹ்வா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** 52 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். நான்கு இடங்களில் சுதேச ஊழியர்களுக்கான கூடுகை நடைபெற்றது. தன்னார்வ ஊழியர் ஜெயராம் பாய் ஞாயிறு ஆராதனை நடத்தப் போகும் வழியில் மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் அருகிலிருந்தவர்களின் உதவியால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அறுவைசிகிச்சையின் மூலம் தற்போது சுகம்பெற்றுள்ளார். சுந்தா கிராமத்தில் கலாபேன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது கையில் பாம்பு ஏறினபோதும் அது தீண்டாதபடி தேவன் அவரை பாதுகாத்தார். உடலில் இரத்த குறைபாட்டினால் அடிக்கடி மயக்க நிலைக்குச் சென்ற விதவை விசுவாசியான மைனா பேனுக்கு ஜெபத்தின் மூலம் இரத்தம் அதிகரிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டக்லிபாடா கிராமத்திலுள்ள தேவாபேன் மற்றும் மத்தியா கிராமத்திலுள்ள சீத்தாராம்பாய் பக்கவாதத்திலிருந்தும், லீலா பேன் குடல்வால் அழற்சியிலிருந்தும், லாகன்பாய் & லக்ஷ்சுபாய் புற்றுநோயிலிருந்தும் சுகம்பெற; செவிலியர் படிப்பை முடித்துள்ள அஞ்சலி பேனுக்கு விரைவில் வேலை கிடைக்க; டாங்ஸ் மாவட்டத்தில் எல்லா கிராமங்களிலும் அனுமான் கோவில் கட்டப்பட்டு வருவதால் மதவாத இயக்கங்கள் விசுவாசிகளையும், ஊழியர்களையும் அச்சுறுத்தி வருகின்றனர். கலாம்பா கிராமத்தில் தீவிர எதிர்ப்பை தெரிவித்து வரும் காசிராம், பாலு, சுரேஷ், பிரவீன், மோஹன், ராமாஜ், குமன், மாலு, ராலு, ராமண் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் தைரியத்தோடு ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளவும், விசுவாசத்தைவிட்டு பின்வாங்காமலிருக்கவும் ஜெபிப்போம்.

## சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** ஏழு இடங்களில் நடைபெற்ற இரவு கூட்டங்களின் மூலம் சுமார் 225 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு முழுவதும் தூங்காமல் அழுதுக் கொண்டிருந்த 10 மாத ஆயுஷ் என்ற குழந்தைக்காக நமது விசுவாசி ஷோபாபேன் ஜெபித்த போது குழந்தை அழுவதை நிறுத்தி சுகமாய் தூங்கும்படி தேவன் கிருபை செய்தார்; மிஷனெரியின் இளைய மகனின் திருமணத்தை ஆசீர்வாதமாய் நடத்தித்தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் தேவனை விசுவாசிக்க; ஆராதனை நடத்த நிரந்தரமான இடம் கிடைக்க; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; வியாபாரத்தில் மந்தநிலை ஏற்பட்டதினால் தங்கள் சொந்த கிராமங்களுக்கு திரும்பியுள்ள விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும், தங்கள் உறவினர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா டேவிட் மஸிஹ்

## உம்மர்காம்:

### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** தும் மற்றும் நிகோலி கிராமங்களில் 15 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். வாபி, ஜரோலி, போரவ் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்க தேவன் உதவிசெய்துள்ளார். சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சிகள் பயனுள்ளதாய் அமைந்துள்ளது. இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதோடு 150 கைப் பிரதிகளும், 10 முழு வேதாகமமும், 45 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிகோலி மற்றும் அங்லாஸ் ஆலய ஆண்டுவிழா தேவநாமம் மகிமைப்படும்படி நடைபெற; நடை பெறவுள்ள வாலிபர் கூடுகை, இரவு கூட்டங்கள், வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், திருமுழுக்கு ஆராதனைகள், உபவாச ஜெபங்கள் யாவும் தடையின்றி திட்டமிட்டபடி நடைபெற ஜெபிப்போம்.

## சில்வாசா:

### டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** சுமார் 290 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 97 பேர் தேவனு டைய மந்தையில் இணைந்துள்ளனர். இரண்டு கிராமங்களில் படக்காட்சி ஊழியம் நடத்த தேவன் உதவி செய்தார். அம்பாபாரி ஆலய பிரதிஷ்டை தேவ நாமம் மகிமைப்படும்படி நடைபெற்றது. நான்கு நாட்களாக சிறுநீர் கழிக்க கஷ்டப்பட்ட தீருபாய்க்கு ஜெபத்தின் மூலம் சுகம் கிடைத்தது. தர்க்கிபேனை பாம்பு கடியிலிருந்தும், லீலாபேனை தேள் கொட்டுவதிலிருந்தும் தேவன் பாதுகாத்தார். கிறிஸ்துவுக்கு விரோதமாய் பேசி வந்த பூஜாபேன் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்யப்படவேண்டிய நிலையில் விசுவாசிகளின் ஜெபத்தினால் அறுவைசிகிச்சையின்றி சுகம்பெற்றதால் தேவனை விசுவாசித்து வருகிறதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்தங்கியுள்ள மனிஷாபேன் மற்றும் சூர்ஜிபாய் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத் திருக்க; கஜரிபேனுக்கும், அஜய்பாயின் மகளுக்கும் தெளிவான கண்பார்வையை தேவன் அருள; சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ள தினோடா மற்றும் கடாலி கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; 15 வயது பிரியாவுக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலை தர; தொழு நோயிலிருந்து அர்ச்சனாபேனுக்கும், மனநோயிலிருந்து தேஜல்பேனுக்கும் தேவன் பூரண சுகத்தை அருள; தர்மேஸ்பாய் மற்றும் சந்தோஷ்பாய் ஆலய ஆராதனையில் தவறாமல் பங்கு பெற்று விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

## 20 டிசம்பர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேவ கிருபை விஜய் பாபு

### போடோலி & தபோய்:

**ஏசுபாபு & உஷா**

**துதிக்க:** சுமார் 128 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தால்நகரில் ஒரு ஆராதனைக் குழுவும், சபையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனம்புரியா வியாதியினால் பலமாதங்களாக அவதியுற்று வந்த விகேஷ் பாயின் மனைவி ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு ஜெபித்தபோது தேவன் அவருக்கு பூரண சுகமருளினார்; ஏழு வருடங்களாக குழந்தை பாக்கியமில்லா திருந்த தக்ஷாபேனுக்கு ஜெபத்தின் மூலம் குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தினிமித்தம் தன் சொந்த குடும்பத்தினரால் உபத்திரவங்களை அனுபவித்து வரும் சிங்லாபாய் மற்றும் ராமேஷ் பாய் தங்கள் விசுவாசத்தில் உறுதி யாய் நிலைத்திருக்க; 13 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்தி ருக்கும் மீனாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; விசுவாசியான ராகுல்பாயை மன உளச்சலுக்குள்ளாக்கும் அவரது மனைவி மனந்திரும்பி இரட்சிக்கப்பட; மிஸ்லிபேன் மற்றும் சவாந்திபேன் புற்றுநோயிலிருந்து பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### கவாண்ட்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் 40 குடும்பங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். ஆறு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கையிட்டனர். தன்பாய்டி கிராமத்தில் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தி, ஆராதனையை நிறுத்திய தமாதியாபாய் என்பவர் சுதேச ஊழியர்களை அழைத்து தனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டார். டரஸ்வா கிராமத்தைச் சேர்ந்த சகினா பேன் பிரசவ சமயத்தில் மயக்கமான போதிலும் குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தைக்கேட்டு சுகப்பிரசவத்தை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் கண்பார்வையை முற்றிலும் இழந்துள்ள புதிய விசுவாசி களான இன்பால்பாய் மற்றும் ராஜ் மால்பாய்க்கு தேவன் கண்பார்வையை அருள; நான்கு வருடங்களாக கேட்கவும், பார்க்கவும் இயலாதிருக்கும் பும்டிபேனுக்கு தேவன் அற்புதம் செய்ய; ஜார்வி கிராமத்தைச் சேர்ந்த சப்னாபேனுக்கு தேவன் குழந்தை பாக்கியமருள; உபத்திரவத்தினிமித்தம் ஆலய ஆராதனை நிறுத்தப்பட்டுள்ள தன்பாய்டி, உமர்காடி, கக்குட்சீலா சனோடா கிராமங்களில் மீண்டும் ஆலய ஆராதனை துவங்கப்பட ஜெபிப்போம்.

## 21 டிசம்பர்
சனி

### ஜாலோத்:
**குமார் பால் & அமுதா**

**துதிக்க:** ஜபில் கிராமத்தைச் சேர்ந்த நிலேஷ் பாய் மீண்டும் ஆராதனையில் தவறாமல் கலந்துக்கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். கொடியா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான பயிற்சிக் கூடுகை சிறப்பாக நடை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகம வகுப்புகள், வாலிபர் முகாம் மற்றும் எழுப்புதல் கூட்டங்கள் தடையின்றி ஆசீர்வாதமாய் நடைபெற; ஜலம்பூரைச் சேர்ந்த சோமா பாய் குதிகாலில் கூடுதல் எலும்பு வளர்ச்சி மற்றும் சுவாசப் பிரச்சனையிலிருந்தும், ராம்லால் பாய் பக்கவாதத்திலிருந்தும் சுகம்பெற; நீடா பென் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; ஷர்லா பென், மார்த்தா பென் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; திட்ட மிட்டபடி கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெறவும், இப்பணித்தளத்திலுள்ள அனைத்து விசுவாசிகளும் குடும்பத்துடன் பங்கு பெறவும், சுதேச ஊழியர்களின் ஒத்துழைப்புக்காகவும், பொது மக்களின் ஆதரவுக்காகவும், நிதித்தேவைகள் சந்திக்கப்படவும், இந்நிகழ்ச்சி மிகுந்த பலனைத்தரவும் ஜெபிப்போம்.

### பிரான்தீஜ் & தேகம்:
**பிஸ்வோ ரஞ்சன் கராடோ & பிரபினாராணி கராடோ**

**துதிக்க:** ஆத்மராம் மற்றும் சோமாகாகா சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருகின்றனர். தன் மனைவியை இழந்த கௌரங்கா தேவனுடைய வசனத்தின் மூலம் ஆறுதல் பெற்று வருகிறார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த கன்ஷ்யாம் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறார். இருச்சக்கர வாகன விபத்திலிருந்து தேவன் மிஷனெரியைப் பாதுகாத்தார். புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பல்லவிபேன் மரணம்வரை விசுவாசத்தில் உறுதியாய் இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசியான தன் மனைவிக்கு இடையூறு விளைவிக்கும் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமைப் பட்டுள்ள அல்குபாய் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் பங்கஜ்பாய் மற்றும் ஸ்ரீனில்பாய் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வஸ்னா சௌத்ரி கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; பாயல் மற்றும் அமித்பாய் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; மனநலம் பாதிக்கப்பட்ட ஜெயதீப்க்கு தேவன் பூரண சுகமருள; புல்புல்பேன் மற்றும் ரேகாபேன் குடும்பங்களில் நிலவும் பிரச்சனை நீங்கி தேவன் சமாதானமருள; மார்பகப் புற்று நோயினால் அவதியுறும் லலிதாபேனை தேவன் குணமாக்க ஜெபிப்போம்.




## மகாராஷ்டிரா

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** 34 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். கேர்பாடா ஆலயம் கட்ட அடித்தளம் போடப்பட்டுள்ளது. ஹரக்மால் ஆலயத்தில் நடைபெற்ற பெண் தலைவர்கள் கூடுகையில் 47 பேர் கலந்து கொண்டனர். சந்த்வேகன் ஆலய ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. மின்னல் தாக்குதலிலிருந்து சக்கரம்பாய் மற்றும் தெளலிபேன் தேவனால் பாதுகாக்கப்பட்டனர். நதியில் குளிக்கும் போது விஷப்பாம்பின் கடியிலிருந்து மனாபாயை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரேகா ஆலயத்திற்குச் செல்வதை தடைசெய்யும் அவரது கணவர் மற்றும் அவரது பெற்றோர் மனந்திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட; வாடி கிராமத்தில் தொழுநோயால் அவதியுறும் கோப்ஜிபாய்க்கு தேவன் அற்புத சுகமருள; சபை மூப்பர் பயிற்சியில் மூப்பர்கள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள; கேர்பாடா ஆலயக் கட்டுமானப்பணிக்கு உதவிட விசுவாசிகள் வாஞ்சையுடன் முன்வர; ஏழு இடங்களில் ஆயத்தம் செய்துள்ள விடுமுறை வேதாகமப் பள்ளி மூலம் அனைத்து சிறுவர்களும் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள; தெக்வார்பாடா கிராமத்தில் ஆலயக் கட்டு மானப்பணிக்கு இடையூறு விளைவிக்கும் நாவ்ஜீபாய் தேவனால் தொடப்பட; இரண்டு இடங்களில் நடைபெறவிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## ஜெபமே ஜெயம்

*மத்தியபிரதேச மாநிலத்தின் பாக்லியைச் சேர்ந்த சுதேச ஊழியர் தீபக் அக்டோபர் 6ஆம் தேதி இரவு கூட்டம் நடத்தச் சென்றபோது மதவாத கும்பலால் தாக்கப்பட்டதோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி மக்களை வற்புறுத்தினார் என பொய்வழக்குத் தொடுத்து அவரை சிறையிலடைத்தனர். அக். 12ஆம் தேதி மற்றொரு சுதேச ஊழியர் தினேஷ் மற்றும் விசுவாசிகள் மாவ்டா, ஹரிபாபா, ஜீபன், அர்ஜுன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கான அனைத்து ஜாமீன்களும் நிராகரிக்கப்பட்ட நிலையில் விசுவாசிகள் மற்றும் ஊழியர்களுடன் நம் இயக்கத்தின் அனைத்து ஜெபக்குழு உறுப்பினர்களும் ஊக்கமாக ஜெபித்து வந்தனர். இதன் விளைவாக அக். 21இல் அர்ஜுன், தீபக் ஜாமீன் பெற்றனர், நவம்பர் 14ஆம் தேதி தினேஷ், ஜீபன், ஹரிபாபா ஆகியோரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! இப்பகுதியில் தேவனுடைய ஊழியத்தை விடுதலையோடு தொடரவும், நீதிமன்ற வழக்குகள் விரைவில் முடிக்கப்படவும் ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அர்ச்சனா மோகன்

## பெயிண்ட் பிராந்தியம்:

### எம். வினு & சுபிலா, ஞான சுந்தரி

**துதிக்க:** 15 புதிய கிராமங்களில் சுமார் 1346 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. 96 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டுள்ளனர். மிஷனெரிகளின் கூடுகை பெரியமலையில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. மின்னல் தாக்குதலிலிருந்து பாரதிபாய், சக்கராம்பாய், தாவ்லிபேன் ஆகியோரை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். கொப்லா கிராமத்தின் கமலி பேனுக்கு பக்கவாதத்திலிருந்து தேவன் அற்புத சுகமருளினார். மாவட்ட அளவில் நடந்த விளையாட்டுப் போட்டியில் நமது விடுதி மாணவன் முதல் பரிசைப்பெற தேவன் உதவி செய்தார். நான்கு விடுதிகளிலுள்ள மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கூடுகையில் 74 பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதோடு 39 பேர் முழுநேர ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணித்துள்ளனர். சிறுநீரகப் பிரச்சனை யிலிருந்து ஷானிபாயை சுகப்படுத்திய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எலும்பு தேய்மானத்தினால் கஷ்டப்படும் மிஷனெரியின் தாயார் லீலாவுக்கு தேவன் பரிபூரண சுகம்தர; மொப்படா கிராமத்தில் எதிர்ப்பினால் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தயங்குவோருக்கு தேவன் தைரியத்தின் ஆவியைக் கட்டளையிட; நரம்பு பாதிப்பினால் கை கால் செயலிழந்து காணப்படும் ரீத்தாபேன், தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள கோப்ஜிபாய், நெஞ்சு வலியினால் கஷ்டப்படும் சுதேச ஊழியர் வசந்த்மஸி, சுவாச பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள 11 மாத குழந்தை அங்கித் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; சுதேச ஊழியர்கள் உற்சாகத்துடன் தங்களின் பணிகளை நிறைவேற்ற; ரேகாபேனை ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் அவளது கணவர் குடும்பத்தார் தேவனின் அன்பினால் தொடப்பட; கர்மால், மூலங்கி, கேர்பாடா, கௌட்டுவால் ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் விசுவாசிகளின் ஒத்துழைப்புடன் விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** முதன்முறையாக 72 பேர் நற் செய்தியை கேட்டுள்ளனர். 7 கிராமங்களில் பின்தொடர்பணி செய்யப்பட்டுள்ளது. 5 முழு இரவு ஜெபங்களும், 6 இடங்களில் உபவாச ஜெபமும் தடையின்றி நடை பெற்றது. மிஷனெரிகள் இல்லாத வேளைகளில் தன்னார்வ ஊழியர்கள் ஆராதனையை நடத்த தேவன் உதவி செய்தார். டப்ரியம்பா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு ஆரம்பிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோனால் வயிறு வீக்கத்தி லிருந்தும், நிர்மலா பெலவீனத்திலிருந்தும், ஷிஜல் குடல் வீக்கத்திலிருந்தும், சுவாதி நரம்பு பிரச்சனையிலிருந்தும் சுகம்பெற; தன்னார்வ ஊழியம் செய்யும் உஷா மற்றும் சுனில்பாயின் பெலவீனங்கள் நீங்கி உற்சாகத்துடன் ஊழியம் செய்ய; வேலை நிமித்தம் வெளியிடங்களுக்கு சென்றுள்ள விசவாசிகள் தங்கள் விசுவாசத்தை பாதுகாத்துக்கொள்ள; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ளோர் மனந்திரும்பி ஆலயம் வர ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வேணி ஜாண்

### பிம்பள்நேர், சிர்னிபாடா, சாக்ரி:

**பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஸ்வரி**

**துதிக்க:** ஆறு புதிய கிராமங்களில் சுமார் 3300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 13 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்துள்ளனர். சபை மூப்பர்களுக்கான ஒருநாள் பயிற்சியில் 32 சபை மூப்பர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். முள்ளர் என்ற கிராமத்தில் புதிய ஜெபக்குழு துவங்க கர்த்தர் கிருபை செய்தார். இரண்டு நாட்கள் நடைபெற்ற உபவாச கூட்டத்தில் சுமார் 120 விசுவாசிகள் கலந்து கொண்டு ஜெபித்தனர். விசுவாசிகளுக்கான இரண்டு நாள் கூடுகையில் 180 பேர் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் அதிகமாய் வளர உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரளா, சாரிகா, சோனியா, மீனா, சரளா ரவி ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; விக்ரம் பாவர், விஷ்ணு பாவர் மற்றும் காயத்ரி குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; போபட், பிராமான்வேல், பிஞ்சரிபாடா ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்ய எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; தொழுநோயிலிருந்து மங்கள்தாஸ், மனநோயிலிருந்து அஞ்சலி, பக்கவாதத்திலிருந்து கோமிபேன் சுகம் பெற; அசுத்தாவியின் பிடியிலிருந்து ரகுநாத் மற்றும் ராதாவுக்கு தேவன் விடுதலைத் தர ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஹுப்ளி பிராந்தியம்:

**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** கடந்த மாதம் 13 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்துள்ளனர். ஹுப்ளி பிராந்தியத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் சுமார் 1200 பேர் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்துகோட் மற்றும் எல்பர்காவில் ஆலயம் கட்ட விரைவில் நிலம் வாங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; நமது சுதேச ஊழியர் சந்தோஷின் மீதுள்ள வழக்கு விரைவில் முடிக்கப்பட; ஹுப்ளி பிராந்தியத்திலுள்ள வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

### முண்ட்காட் & ஷிக்காவ்:

**நரேந்திரா குமார்**

**துதிக்க:** ஐந்து பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டுள்ளனர். விசுவாசியான நிங்கப்பாவின் தந்தை மரித்தபோது அவரை அடக்கம்பண்ணவிடாமல் ரூ.60,000 அபராதம் விதித்த கிராமத்தினர் கிறிஸ்தவர்களின் ஊக்கமான ஜெபத்தினால் மனதில் மாற்றம் பெற்று அவர்களே வந்து அடக்கத்தில் உதவி செய்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் நடக்கமுடியாமலிருக்கும் பிரகாஷ்க்கு தேவன் பரிபூரண சுகம்தர; இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்திருக்கும் முல்லேஷப்பாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; காவேரி என்ற இரண்டு வயது குழந்தையின் இருதயத்திலுள்ள ஓட்டை மறைய; சர்க்கரை நோயினால் விரல் அழுகிய நிலையிலிருக்கும் விசுவாசியான பேபிஜான் என்ற முகமதிய பெண்ணுக்கு தேவன் சுகமருள; மதவாதிகளின் எதிர்ப்பின் மத்தியிலும் இவ்வாண்டு இலக்கை அடைய நமது ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சுவிசேஷத்திற்கு அதிக வாஞ்சைக் காட்டும் சித்தி இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய சித்தி மொழி தெரிந்த திரு. இம்மானுவேல் என்பவர் தன்னை முழுமையாய் ஊழியத்திற்கு அர்ப்பணிக்க ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிபெனி ஜமி

## ஷிரஹட்டி:

### ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** இரண்டு பேர் தேவனுடைய மந்தையில் இணைந்துள்ளனர். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த எல்லம்மாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். சாந்தம்மாவுக்கு வீடு கட்ட நிலம் வாங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த ஒருமாதமாக சிறுநீரகப் பிரச்சனையினால் அவதியுறும் நிர்மலா வுக்கு தேவன் பரிபூரண சுகம்தர; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள நாகராஜு குடியிலிருந்து விடுதலை பெற்று, மனந்திரும்பி இரட்சிக்கப்பட; அநேக மாதங்களாக தோல் ஒவ்வாமையினால் கஷ்டப்படும் ஜமீலா மற்றும் மஞ்சுளாவை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## கஜேந்திரகடா:

### லுபின் முர்மு & சலோமி ஹன்ஸ்தா

**துதிக்க:** நமது விசுவாசி துர்கம்மா கிராம பஞ்சாயத்துத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட தேவன் கிருபை பாராட்டினார். விபத்தில் தலையில் பலமான காயங்கள் ஏற்பட்டபோதிலும் பிரபுவின் ஜீவனை தேவன் பாதுகாத்தார். சாலையோரத்தில் நின்றுக்கொண்டிருந்த ரமேஷ் மீது வேகமாக வந்த வாகனம் மோதி கால் எலும்பில் முறிவு ஏற்பட்ட போதிலும் அற்புதமாய் அவரது ஜீவனை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி மாலாம்மா மன நோயினால் பாதிக்கப்பட்ட தன் மகனின் சிகிச்சைக்காக பெற்ற கடன் ரூ.4 இலட்சத்தை திருப்பி செலுத்த இயலாத நிலையில் உள்ளார். தேவன் அவருக்கு உதவி செய்ய; கிறிஸ்துவை விசுவாசிக்கும் ரேணுகா, நேத்ரா, ரூத் மற்றும் ஆஞ்சநேயா தங்கள் விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோனவர்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## நிடகுந்தி:

### மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

**துதிக்க:** ஐந்து ஆண்டுகளாக குடிக்கு அடிமைப்பட்டிருந்த சந்தோஷ்க்கு தேவன் விடுதலை அருளினார். மல்லிகார்ஜுன் புதிய வீட்டைக் கட்ட தேவன் கிருபை பாராட்டினார். ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மருத்துவம் பயிலும் எஸ்தருக்கு தேவன் விசேஷித்த ஞானத்தை அருள; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் சாரதாவின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ள; விசுவாசி பாசுராஜிடம் ரூ. 2 இலட்சம் கடன் பெற்ற லக்ஷ்மண் 5 வருடங்களாக கடனைத் திருப்பித் தராமல் ஏமாற்றி வருகிறார். அவரின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய ஜெபிப்போம்.

**26**
**டிசம்பர்**
**வியாழன்**

## ஹலியால்:

**தாங்லால் ஸௌ & நெம்ஸாவா**

**துதிக்க:** நாகம்மா, மயூரி ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச் சபையில் இணைந்துள்ளனர். ஹிரேமுண்டுகொல்லி கிராமத்தைச் சேர்ந்த நமது புதிய தொடர்பாளர் லக்ஷ்மிக்காக ஏறெடுக்கப்பட்ட ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு சுகமான பிரசவத்தை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்துகோடு கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் வாங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப் பண்ண; கடன் பிரச்சனையிலிருக்கும் மடிவாலிக்கு தேவன் உதவி செய்ய; நாகேஷ் குடியிலிருந்து விடுபட; மார்பு புற்றுநோயின் முதல் கட்டத்திலிருக்கும் துர்கம்மாவுக்கு தேவன் பூரண சுகம் தர; மூல வியாதி, குடலிறக்கம், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோயினால் கஷ்டப்படும் ருத்ரப்பாவுக்கும், ஒரு வருடமாக படுக்கையிலிருக்கும் சுபாஷுக்கும், தைராய்டு மற்றும் குறைந்த இரத்த அழுத்தத்தால் அவதியுறும் கமலம்மாவுக்கும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து சோபாவுக்கும் தேவன் பூரண சுகம் தர ஜெபிப்போம்.

## கானாப்பூர்:

**வினயராஜ் & சாந்தா**

**துதிக்க:** மூன்று நாள் உபவாச ஜெபம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. மூத்த விசுவாசியான பாசப்பாவை இரயில் விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீனாவின் கணவர் சாந்தன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், குடும்பத்தில் சமாதானம் ஏற்படவும்; புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வரும் மிஷனெரி வினயராஜ்க்கு சிகிச்சையின் பக்கவிளைவுகளிலிருந்து தேவன் பாதுகாக்கவும், பூரண சுகம் தரவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## முண்டர்கி:

**சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** அமடாபுடி இனத்தைச் சேர்ந்த மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 120 பேருக்கு முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெல்லாரி, சிறுகுப்பா, ஹோஸ் பேட், குட்லிகி, சந்தூர், ஹடகலி மற்றும் கரிபொம்மனஹள்ளி தாலுக்காக்களில் செய்யப்படவிருக்கும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும், நல்ல பலனைத் தரவும்; பிரபாகர் மற்றும் கங்கம்மா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற்று தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; முண்டர்கி தாலுக்காவில் மூட நம்பிக்கைக்கு அடிமைப்பட்டுள்ள மக்கள் அதிலிருந்து விடுதலைப் பெற்று மெய் தேவனை அறிந்துக்கொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. ஸ்வேதா வர்மா

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

**ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) & ஞானசேகரி**

**துதிக்க:** தேஜா என்ற சிறுமியை ஜெபத்தின் மூலம் புற்றுநோயிலிருந்து தேவன் குண மாக்கினார். ரெட்டிவாரிபள்ளி கிராமத்தில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட ராகேலம்மா வுக்கு எண்ணெய் பூசி ஜெபித்ததைத் தொடர்ந்து எழுந்து நடக்க தேவன் கிருபை செய்தார். எர்ரபள்ளி கிராமத்தைச் சேர்ந்த அபிகாயில் அம்மா மற்றும் மரியம்மாவை விஷப் பாம்பிடமிருந்து தேவன் பாதுகாத்தார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கின போவாஸ் கண்ணையா & ரூத் அனுசியா குடும்பத்தினர் தொடர் ஜெபத்திற்குப் பின் ஆலயத்திற்கு வரத் தொடங்கியுள்ளனர். இவரது வீட்டில் நடந்த ஜெபக் கூடுகையில் இவரது மகள் உஷாவுக்கு பிசாசின் பிடியிலிருந்து பூரண விடுதலையை தேவன் கட்டளையிட்டார். கூகுலவாரிபள்ளி மற்றும் ராஜீவ் காலனி கிராமங்களில் பின்தொடர் பணி மூலம் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்கு தேவன் தைரியத்தின் ஆவியை தர; லக்ஷ்மி தேவியை ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள விடாமல் தடைசெய்யும் அவரது கணவர் பிரபாகர் மற்றும் அவரது மகன் தேஜா குமார் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; பிசாசின் பிடியிலிருந்து தேவனால் விடுதலை பெற்ற உஷாவை ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் நாராயண் மற்றும் அவரது பெற்றோரின் இருதயத்தில் தேவன் இடைபட; இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து டயாலிஸிஸ் செய்து வரும் விக்டர் வீராசாமிக்கு தேவன் அற்புத சுகத்தை கட்டளையிட; பிசாசின் தொல்லையிலிருந்து விசுவாசி ஸ்டெல்லாவுக்கு தேவன் விடுதலை அருள; விசுவாசிகளின் குடும்பங்களில் பிரிவினைகளை உண்டுபண்ணும் அசுத்தாவியின் கிரியைகளை தேவன் முறியடிக்க ஜெபிப்போம்.

## குப்பம்: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** கொட்டசம்பாகிரி, பண்டகொத்தூரு, சங்கனபள்ளி ஆகிய கிராமங்களில் சுமார் 1050 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சாந்திபுரம் ஆலயத்தில் முதன்முறையாக அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. விவசாயத் திற்கு போதுமான அளவு மழையை தேவன் நம் விசுவாசிகளுக்கு அருளினார். கௌதமியை மஞ்சள்காமாலையிலிருந்து தேவன் சுகப்படுத்தினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீரிழிவு நோயினால் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ள சண்முகம் எடுக்கும் மருத்துவ சிகிச்சையில் தேவன் நல்ல பலனைத் தர; இருதய அறுவை சிகிச்சை செய்துள்ள மோனிகாவுக்கு தேவன் பூரண சுகம்தர; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சசிகுமாரை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் மஸிஹ்

திருமதி. பாருடே சிலாபாய் ரடியா

## ரொத்தம்:

### தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து சபையில் இணைந்துள்ளனர். வெங்கடபுரம் கிராமத்தில் 12 புதிய விசுவாசிகளுக்கு பயிற்சி அளிக்க தேவன் கிருபை செய்தார். ஆறு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு கிராமங்களில் படக்காட்சி ஊழியம் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெங்கடபுரம் கிராமத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் கட்டளையிட; ரொத்தம் பணித்தளத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் அருளிச் செய்ய; துர்கலாபட்டணம் கிராமத்தில் மீண்டும் ஞாயிறு ஆராதனை துவங்கப்பட; ஆத்தும பாரம் உள்ள தன்னார்வ ஊழியரை தேவன் எழுப்பித்தர; ராஜம்மா மனநோயிலிருந்து சுகம் பெறவும், சஞ்ஜீவப்பாவின் கை கால்கள் செயல்படவும் ஜெபிப்போம்.

## வி. கொட்டா:

### கென்னத்கரியப்பா & கீதா

**துதிக்க:** முதன்முறையாக சுமார் 350 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பைரெட்டிபள்ளி ஆலயத்தின் மேற்கூரை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு புதிய ஏற்பாடுகளும், 30 நற்செய்தி புத்தகங்களும் விநியோகிக்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோயினால் பாதிக்கப் பட்டிருக்கும் மணிக்கு தேவன் பூரண சுகமருள; சுப்பிரமணி & லக்ஷ்மி குடும்பங்களை தேவன் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்க; பைரெட்டிப்பள்ளி ஆலய பராமரிப்பு பணிகள் விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## புலிவேந்தலா:

### டேனியல் விஜயராஜ் & இந்திராம்மா

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் நாகம்மாவின் மகன் குருதேவ் தன் மனைவியுடன் இணைந்து வாழ தேவன் கிருபை செய்தார். விசுவாசி சாந்தியம்மாவின் ஊக்கமான ஜெபத்தினால் அவரது மகள் ஷோபா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கையிட தேவன் உதவி செய்தார். வெளிப்புற சந்திப்பு ஊழியத்திற்கென விசுவாசிகள் தங்கள் நேரத்தையும், பணத்தையும் தியாகத்துடன் கொடுப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாலை விபத்தில் காயமுற்ற ரத்னம்மாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; அஞ்சனம்மா கணவர், சரோஜம்மாவின் மகன், சுகன்யாவின் கணவர், மார்த்தம்மாவின் கணவர் ஆகியோர் இரட்சிக்கப்பட; திட்டமிட்டபடி அனைத்து ஊழியங்களும் தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. மணிசெல்வி சாரதி

### சதுவும்:

**அனில் மஹாலி & பிரசாந்தி**

**துதிக்க:** விஜய் மற்றும் அவரது குடும்பம் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். செட்லாவாரிபள்ளி கிராமத்தில் படக்காட்சி ஊழியம் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். விவசாயம் செய்யும் நமது விசுவாசிகளுக்கு தேவன் போதுமான அளவு மழையைத் தந்து ஆசீர்வதித்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் சரிதாவுக்கு நடக்க வுள்ள தொண்டை அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெறவும், அவர் முழுஇருதயத்துடன் தேவனை விசுவாசிக்கவும்; ஜோகிவாரிப்பள்ளி கிராமத்தில் விசுவாசிகள் மத்தியில் தேவன் ஐக்கியத்தை கட்டளையிட; விசுவாசி ஜான்சனுக்கு கீழ் முதுகில் காணப்படும் வலி நீங்கி சுகம்பெற ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### அஞ்செட்டி:

**டேவிட் நிக்கல்சன் & ஐவி**

**துதிக்க:** ஒடேபுரம், சிவலிக்கபுரம், இந்திராநகர், தக்காடி, பசபட்டணா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்துள்ளார். லக்ஷ்மி மற்றும் ஜோதியின் குடும்பத்தினரை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். வனிதாவை இருதயப் பிரச்சனையிலிருந்தும், அன்னாள் மற்றும் தவமணியை பக்கவாதத்திலிருந்தும் குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுரேஷ், கோபிநாத், நாகமது, ரேகான், இம்மானுவேல், நாகராஜ் ஆகியோர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற; இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள பெருமாளுக்கு தேவன் சுகம் தர; மனநோய் பாதிப்பினால் வீட்டைவிட்டு காணாமல்போன பரமேஸ் பத்திரமாய் வீடு திரும்ப; புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; புதிதாக சுவிசேஷம் கேட்ட 20 பேரும் இயேசுவே மெய்யான தெய்வ மென்று அறிக்கையிட ஜெபிப்போம்.

### மேச்சேரி:

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** மழைக் காலங்களில் விசுவாசி களையும், அவர்களது கால்நடைகளையும் சுகவீனங்களிலிருந்து தேவன் பாதுகாத்தார். முனிசாமி, செல்வி இவர்களின் குடும்பத்தில் காணப்பட்ட பிரச்சனைகளை நீக்கி தேவன் சமாதானத்தைக் கட்டளையிட்டார். ஜெயஸ்ரீயை டைபாய்டு காய்ச்சலிலிருந்து தேவன் குணப்படுத்தினார். ஊழியத்திற்கு தேவன் தந்து வரும் திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்ணையன், ஜெயலெட்சுமி ஆகியோருக்கு சுவாசப் பிரச்சனையிலிருந்து தேவன் சுகம்தர; மூர்த்தி குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலைபெற; மோனிஷா & உமா மகேஷ்வரன் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியமருள; பாமா, சாந்தி, லக்ஷ்மி, கலா, திவ்யா, மூர்த்தி, கோபி, ஸ்ரீனிவாசன், மாரியப்பன், முத்துலஷ்மி ஆகியோர் குடும்பமாக தேவனை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இப்பகுதியில் விரைவில் ஆராதனைக் குழு ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அன்பையா P.

திரு. அருண்குமார் G.

திரு. டேனியல் மார்வெல்ராஜ் D.

## சந்திரபட்டி:

**அர்ச்சனா மோகன்**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுமார் 100 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. 200 கைப் பிரதிகள், 5 புதிய ஏற்பாடுகள், 5 முழு வேதாகமங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன. கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள விண்ணரசிக்கு தேவன் சுகம் தந்து வருகிறார். ஞாயிறு பள்ளிக்கு வரும் பிள்ளைகள் வேதாகம தேர்வு எழுத தேவன் கிருபை செய்தார். எமிமாளுக்கு இருதயப் பிரச்சனையிலிருந்து தேவன் தந்துவரும் சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திடீரென்று ஞாபக சக்தியை இழந்துவிடும் சந்திரப்பட்டி கிராமத்தில் வசிக்கும் மங்கம்மாளுக்கு தேவன் சுகமருள; விசுவாசத்தைவிட்டு பின் மாற்றமடைந்துள்ள சுகாஷின் மனந் திரும்பி மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற; ஞாயிறு ஆராதனை மற்றும் சிறுவர் வகுப்புகள் தடையின்றி நடைபெறவும், விசுவாசிகளின் பிள்ளைகள் தவறாமல் ஆலய ஆரானையில் பங்குபெறவும் ஜெபிப்போம்.

## தேன்கனிக்கோட்டை:

**எஸ். ஜெபராஜ் (ஓய்வு) &**
**எஸ்தர் தங்கம்**

**துதிக்க:** காரண்டப்பள்ளி, சிக்கேபுரம் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார். கொங்கு செட்டிப்பள்ளி, தேர்வீதி, கோட்டைவாசல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். மரக்கட்டா சாலையைச் சேர்ந்த நிறைமாத கர்ப்பிணியான விசுவாசி அற்புதம் அவர்களுக்கு அறுவை சிகிச்சையின்றி குழந்தை பிறப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறிய நிலையில் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தில் குழந்தை பெற்றெடுக்க தேவன் கிருபை பாராட்டினார். பெரியமலையில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் சந்தோஷ், மோசஸ், அந்தேனிப்பள்ளியிலிருந்து ரோஸி, லில்லி ஆகியோர் கலந்துகொள்ள உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொத்தூர், ரொகானூர், உப்சனப்பள்ளி, அர்கெத்தூர் ஆகிய கிராம மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட; விசுவாசத்திற்குள் வந்துள்ள பக்தம்மாள், ஆரத்தி ஆகியோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; விசுவாச வாலிபர்களான மூர்த்தி, சந்தோஷ் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை அமைய; மகேந்திரம், ஸ்டீபன், பிரகாஷ் ஆகியோருக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; மரக்கட்டாவில் ஞாயிறு பள்ளி நடத்த ஒருஅறை விரைவில் கட்டுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சௌதரி ராஜேஷ் தாவ்லிபாய்

திரு. அனில் மஹாலி

## தலைமைத்துவ பயிற்சி மையம் – பெரியமலை:

**பாபுராஜ் & மேபல்**

**துதிக்க:** சுக்கால்பேடு, போலாக்கொல்லை, மூக்கங்கரை, காளிக்கட்டம் ஆகிய கிராமங்களில் சிறுவர் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். கள்ளியூர், பெட்டமுகிலாளம், உருலங்கோட்டை ஆகிய கிராமங்களில் வேதாகம வகுப்புகள் மற்றும் ஜெபக்குழுக்கள் நடத்த தேவன் உதவி செய்தார். மத்தியமண்டல மிஷனெரிகளின் ஆவிக்குரிய கூடுகையில் சுமார் 85 பேர் கலந்துகொண்டனர், அவர்கள் திரும்பி சென்ற வாகனம் மின்கம்பி தாக்கி ஏற்பட்ட தீவிபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். தமிழ்நாடு மண்டலம் சார்பாக நத்தப்பட்ட வாலிபர் முகாமில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதற்காகவும், 20க்கும் மேற்பட்ட வாலிபர்கள் தங்கள் வாழ்வை மிஷனெரிப் பணிக்கென்று அர்ப்பணித்ததற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; சிறுவர் கூட்டங்கள் நடத்தப்பட்ட கிராமங்களிலுள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் இரட்சிக்கப்படவும்; முருகன் என்பவர் பக்கவாதத்திலிருந்து பரிபூரண சுகம்பெறவும்; தலைமைத்துவ பயிற்சி மையம் செல்வதற்கான சாலை விரைவில் அமைக்கப்பட, அதற்காக எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; பெரியமலையில் நடைபெற்று வரும் சுற்று சுவர் கட்டுமானப் பணிகள் தடையின்றி விரைவில் கட்டி முடிக்கப்படவும், எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் இருதயத்தில் தேவன் இடைபடவும், இவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும், அரசு அதிகாரிகளால் எந்த பிரச்சனைகளும் வராதபடி தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

## வார்லி மொழிபெயர்ப்புப்பணி:

**ஆபிரகாம் ஜி. & ஹேமலதா**

**துதிக்க:** டாவரி மொழியில் லூக்கா எழுதின சுவிசேஷம் முதல் நிலை மொழி பெயர்ப்பு முடிக்கப்பட தேவன் உதவி செய்தார். டோக்ரி, நிஹ்ரி மொழியில் சங்கீதம், நீதிமொழிகளுடன் கூடிய புதிய ஏற்பாடு வெளியிடப்பட பணிகள் நடைபெற்று வருகிறது. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர் நடபடிகள் ஆகிய புத்தகங்கள் டோக்ரி, நிஹ்ரி மொழியில் திருத்தப்பட்டு புதிய ஏற்பாடு முடிக்க தேவன் உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோக்ரி, நிஹ்ரி மொழியில் சங்கீதம், நீதிமொழிகளுடன் கூடிய புதிய ஏற்பாடு அச்சடிக்கப்பட; டிசம்பர் மாதம் கோதாவரி, பெயிண்ட், சஹாயத்ரி பிராந்தியங்களில் புதிய ஏற்பாடு அச்சிடுதல் குறித்த கலந்தாலோசனைக் கூட்டம் ஆசீர்வாதமாக அமைய; வார்லி மொழியில் பாடல் புத்தகம் மீண்டும் அச்சடிக்கப்படவும், வார்லி பாடல்கள் (பென்-ட்ரைவ்) குறும் பதிவில் வெளியிடப்படவும்; கண்பார்வை மங்கலாகத் தெரியும் மிஷனெரி ஆபிரகாம் அவர்களுக்கும், பெலவீனத்திலுள்ள அவரது மகள் கிறிஸ்டிக்கும் தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

# நிலத்தில் விழுந்த கோதுமை மணி



## அருள்திரு. தீப்திலால் மாலி

(08.06.1980 - 17.11.2024)

அருள்திரு. தீப்திலால் மாலி ஒடிசா மாநிலத்தின் கஜபதி மாவட்டத்திலுள்ள பரிசால் என்ற கிராமத்தில் திரு. மாற்கு மாலி மற்றும் திருமதி பிசாதினி மாலி ஆகியோருக்கு மூத்தமகனாகப் பிறந்தார். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர் ஆவிக்குரிய வழியில் வளர்க்கப்பட்டார். இசையில் தாலந்து பெற்றிருந்த இவர் பாடுவதிலும், ஆலயம் செல்வதிலும், வேதத்தை தியானிப்பதிலும் உற்சாகம் காட்டி வந்தார். 18.06.1996 அன்று கஜபதியில் நடைபெற்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வாலிபர் கூட்டத்தில் கலந்துகொண்டபோது ரோமர் 3:23-24 வசனங்கள் மூலம் தேவன் அவருடன் இடைபட்டதால், இரட்சிக்கப்பட்டு தன் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தார். பள்ளிப் படிப்பை முடித்தப்பின் இறையியல் இளங்கலை முடித்தார். அதன் பின் நம் இயக்கத்தில் இரண்டு வருடம் தன்னார்வ ஊழியராக பணி செய்தார். 2007ஆம் ஆண்டு முழு நேர ஊழியராக இணைந்த இவர் ஊழியர் பயிற்சிக்குப்பின் பஞ்சாப் மாநிலத்தின் ஜீப் குழுவிலும் அதன் பின்னர் மஜா, கபுர்தலா, அஹ்மத்கர்மண்டி, பர்னாலா ஆகிய பணித்தளங்களிலும் ஊழியம் செய்து வந்தார். 11.05.2012இல் ஒடிசாவைச் சேர்ந்த சகோதரி ரேணுமா சடாங்கியை திருமணம் செய்து குடும்பமாக பஞ்சாபில் ஊழியம் செய்து வந்தார். அவரின் மென்மையான பேச்சு, புன்முறுவல், ஆழ்ந்த அர்ப்பணிப்பு மற்றும் ஊழியத்தில் கடின உழைப்பு பிறரை உற்சாகப்படுத்தக் கூடியதாயிருந்தது. அவரது கடின முயற்சியினால் அஹ்மத்கர்மண்டியில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு அவருக்கு புற்றுநோய் இருப்பதாக கண்டறியப்பட்டு சி.எம்.சி. வேலூர் மருத்துமனையில் சிகிச்சைப் பெற்று வந்தார். சிகிச்சையின் நாட்களிலும் சோர்ந்து போகாமல் ஊழியத்தில் துடிப்புடன் ஈடுபட்டு வந்தார். வலியின் நிமித்தம் இருசக்கர வாகனம் ஓட்டமுடியாத நிலையிலும் பேருந்துகளில் பயணம் செய்து ஊழியத்தைத் தொடர்ந்தார். அவரது மனைவி அவருக்கு நம்பிக்கையையும், உறுதியையும் அளித்து உற்சாகப்படுத்தி வந்தார். சில மாதங்களுக்கு முன் புற்றுநோய் தீவிரமாய் பரவியதைக் கண்டறிந்த மருத்துவர்கள் இனி சிகிச்சை பலனளிக்காது என்பதால் அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி கூறினர். இயக்கம் அவருக்கு, அவரது சொந்த ஊருக்கு செல்ல அல்லது MUT ஒட்டன்சத்திரத்தில் தங்கி அவசர மருத்துவ உதவியைப் பெற வாய்ப்பளித்தனர். அதன்படி அவர்கள் ஒட்டன்சத்திரத்தில் தங்கியிருந்து மருத்துவ உதவி பெற்றுவந்த நிலையில் 17.11.2024 அன்று மதியம் தனது இறுதி ஓட்டத்தை முடித்து தேவ ராஜ்யம் சென்றடைந்தார். அவரது உடல் சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டு 18.11.2024 அன்று காலை ஜெபக்குழுவினர் மற்றும் ஊழியர்கள் கூடி அடக்க ஆராதனை செய்த பின் நல்லடக்கம் செய்யப்பட்டது. கணவனை இழந்துள்ள அவரது மனைவி திருமதி ரேணுமா சடாங்கி மற்றும் டோனாவூர் பள்ளியில் படிக்கும் மைக்கேல் (6-ம் வகுப்பு), இஸ்ரேல் (3-ம் வகுப்பு) என்ற இரண்டு பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

தொகுப்பாளர்:

**Rev. V.P. ஜெபராஜ் சாமுவேல்,** செயலர் - HRD

Regd. Newspaper for India No.17759/69




***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***